விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## சங்குநாதம்




சங்கு 25
ஒலி 194 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 16 ஞாயிற்றுக்கிழமை (30.06.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829


கச்சதீவு, கடல் எல்லைப் பிரச்சினை



### இலங்கை - இந்தியா இடையே புதிய உடன்பாடு எதுவுமில்லை

வெளிவிவகார அமைச்சர் திட்டவட்டம்

17ஆம் பக்கம் பார்க்க



### தீர்மானிக்கும் சக்தியாக ஏன் தமிழர்கள் இருக்கக்கூடாது


பொது வேட்பாளர் தொடர்பில் சிறீதரன் எம்.பி கேள்வி

03ஆம் பக்கம் பார்க்க

வடக்கு - கிழக்கு


### மக்கள் மாற்றத்தை எதிர்பார்க்கின்றனர்

அநுர குமார திஸாநாயக்க தெரிவிப்பு



16ஆம் பக்கம் பார்க்க

# மொட்டுக் கட்சியின் வேட்பாளராக களமிறங்குகிறார் தம்மிக்க



## யாழ்ப்பாணத்தில் இன்று முக்கிய நிகழ்வில் பங்கேற்பு

(யாழ்ப்பாணம்)

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுனவின் (மொட்டுக் கட்சி) ஜனாதிபதி வேட்பாளராகத் தம்மிக்க பெரேரா போட்டியிடுவது உறுதியாகியுள்ளது.**

இலங்கையின் முதற் தரக் கோடீஸ்வரரான தம்மிக்க பெரேராவை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்துவது தொடர்பில் பொது ஜனபெரமுன தீவிரமாக ஆராய்ந்து வந்தது.

இந்நிலையில் ரணில் விக் கிரமசிங்க பொதுஜன பெர முன கட்சியின் தாமரை மொட் டுச் சின்னத்தில் போட்டியிடுவதற்கு 02

### இரணைமடுக்குளத்தில் மூழ்கிய சிறுவன் மாயம்

(கிளிநொச்சி)

இரணைமடுக்குளத்தில் நீராடச்சென்ற 14 வயது சிறுவன் நேற்று காணாமல் போயுள் ளார்.

திருமுறிகண்டி இந்து வித்தி யாலயத்தில் தரம் 9ல் கல்வி கற்கும் முறிகண்டி வசந்த நகர்ப் பகுதியைச் சேர்ந்த செல்வரத்தினம் நுசாந்தன் என்ற 14 வயதுச் சிறு வனே இவ்வாறு 02

### தமிழ்ப் பொது வேட்பாளரை தமிழ்த் தேசியப் பேரவை தீர்மானிக்கும்

வவுனியாவில் நடந்த கூட்டத்தில் முடிவு

(வவுனியா)

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவது தொடர்பான செயற்பாடுகளை முன்னெ டுப்பதற்காக தமிழ்த் தேசியப் பேரவை என்னும் அமைப்பு உதயமாகியுள்ளதாக அரசியல் ஆய்வாள 19



### மிகப் பயங்கரமான சூழலில் யாழ்ப்பாணம் இருக்கிறது

சிறீதரன் எம்.பி காட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பட்டப் பகலில் முகத்தை மறைத்தவாறு வாள்களுடன் நடமாடமுடியும் என்றால் யாழில்சிவில் நடவடிக்கைகள், 19

### ஜனாதிபதித் தேர்தலுக்கு உடன் தயாராகவும்

தேர்தல்கள் ஆணைக்குழு பணிப்புரை

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்கு தயாராகுமாறு அரசாங்க செய் தித் தொடர்பாளர், பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட பொறுப்பு வாய்ந்த 19

### மோ.சைக்கிள் விபத்து; ஸ்தலத்தில் ஒருவர் மரணம்

(மடு)

மடு இரண்டாம் கட்டைப் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார். மற்றைய நபர் படு காயமடைந்துள்ளார்.

குறித்த விபத்து சம்பவம் தொடர்பாக 19

### சமாதான நீதவான் தெரிவு தொடர்பில் புதிய நெறிமுறை

(கொழும்பு)

சமாதான நீதவான்களினை நியமிப்பது தொடர்பிலான புதிய நெறிமுறைகள் 02

### விபத்தில் படுகாயமடைந்தவர் சிகிச்சை பலனின்றி மரணம்

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு மாங்குளத்தில் அண்மையில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்து வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுவந்த ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 48 வய தான கந்தசாமி கருணாகரன் என்பவரே 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணியாளர்கள் தேவை

தேசிய லொத்தர் சபையின் யாழ் மாவட்ட விநியோக காரியாலயத்திற்கு பணியாளர்கள் தேவை.

வயது : 18 - 25 (பெண்கள்)

தகைமை : O/L, A/L சித்தி
கணனி அறிவு, ஆங்கிலம் அடிப்படை அறிவு

- யாழ் மாநகர சபை எல்லைக்குள் அல்லது அருகாமையில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.
- சம்பளம் நேர்முகத் தேர்வின் போது பேசி தீர்மானிக்கப்படும். (25,000 முதல் 40,000 வரை)

தொடர்புகளுக்கு : (C-704)

**077 405 5995**
**No.94 A, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.**

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் கைதடி சந்தி அருகாமையில் A9 வீதி முகப்புடன் 8 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- இருபது அடிப்பாதை (20)
- கைதடி சந்தி 100m தூரம்
- சித்த வைத்தியசாலை முன்பாக
- பார்வை நேரம் காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை
- காணி கொள்முதல் செய்பவருக்கு பிரதேச சபை அனுமதி பெற்றுக்கொடுக்கப்படும்.
- ஒரு பரப்பின் விலை ரூபா இருபது இலட்சம் 20,00,000/=

(125)

**Golden Real Estate (pvt) Ltd**
**077 029 4164,**
**077 329 4130, 077 294 1521**

## மரண அறிவித்தல்

மலர்வு 01 - 10 - 1942



உதிர்வு 28 - 06 - 2024

### திருமதி இந்திராணி கிருஷ்ணபிள்ளை

சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் காரைக்காட்டு லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இந்திராணி கிருஷ்ணபிள்ளை அவர்கள் கடந்த (28.06.2024) வெள்ளிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - காமாட்சி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வைரமுத்து- நாகரத்தினம் தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளையின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற கலைச்செல்வன் மற்றும் கலைச்செல்வி, கலையழகன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், நன்நடத்தைத் திணைக்களம், வடக்கு மாகாணம்), கலையழகி, கலையமுதா(லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் மகாலிங்கத்தின் அன்புச் சகோதரியும் பத்மஸ்ரீ, மாலினி, விஜயகுமார்(RDA), நரேந்திரன்(லண்டன்), யசோதரன் - வித்யாழினி ஆகியோரின் அன்பு மாமியாரும் தயாநிதியின் மைத்துனியும் தர்னிகா, தர்மிளா, ரூபலக்ஷ்மிதா, தர்னிகன், நிலக்ஷா, தஸ்மிதன், திவீசன், யதீசன், அபிசாலினி, கவிஷா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 30.06.2024 இன்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.23, காரைக்காட்டு லேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (C-0703)

தகவல் : குடும்பத்தினர்
077 443 2548
075 978 9184


# அரபிக் கடற் பகுதிக்கு செல்வதை தவிர்க்கவும்

## மீனவர்களுக்கு எச்சரிக்கை

அரபிக் கடற்பிராந்தியத்திற்குப் பயணிப்பதை மறு அறிவித்தல் வரை தவிர்க்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் மீனவர்கள் மற்றும் கடல்சார் செயற்பாடுகளில் ஈடுபடுவோருக்கு அறிவுறுத்தியுள்ளது. குறித்த கடற்பிராந்தியத்தில் காற்றின் வேகம் மணித்தியாலத்திற்கு 70 முதல் 80 கிலோமீட்டர் வரை அதிகரித்துக் காணப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த பகுதிகளில் கடல் கொந்தளிப்பாகக் காணப்படு மெனவும் எதிர்வுகூறப்பட்டுள்ளது.

தற்போது குறித்த கடல் பகுதிகளில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள மீனவர்கள் உடனடியாக கரைக்கு அல்லது பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் கேட்டுள்ளது.(ந)

## விபத்தில்...

உயிரிழந்துள்ளார்.

கடந்த 25ம் திகதி நடந்த மாங்குளம் விபத்தினால் இதுவரை நால்வர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த பேருந்து திருத்த வேலை காரணமாக வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில், பேருந்து மீது பார ஊர்தி மோதி விபத்துக்குள்ளானது.

விபத்து ஏற்பட்டதும் ஸ்தலத்தில் மூவர் உயிரிழந்ததுடன் படுகாயமடைந்த இருவர் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்ட நிலையில் மேற்படி ஒருவர் உயிரிழந்துள்ளார். (ந-7,10,33)

## இரணைமடு...

காணாமல் போயுள்ளார்.

நீராடுவதற்காகப் பிரஸ்தாப சிறுவனும் அவரது சகோதரன் மற்றும் இரு நண்பர்களும் சென்றுள்ளனர்.

முற்பகல் 11.30 மணியளவில் நீராடச் சென்ற இவர்களில் குறித்த சிறுவன் மூழ்கியதையடுத்து அருகில் உள்ள இராணுவ முகாமுக்கும் உறவினர்களும் தகவல் கொடுக்கப்பட்டது.

இந்நிலையில் குறித்த சிறுவனைத் தேடும் பணியில் இரணைமடு மீனவர்களும் பிரதேச மக்களும் ஈடுபட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ந-7,10)

## மொட்டுக்...

உடன்பாடாத காரணத்தாலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அண்மைக்கால செயற்பாடுகளில் மகிந்த ராஜபக்ஷ தரப்பு திருப்தி கொள்ளாத நிலையிலும் தம்மிக்க பெரேராவை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்துவதற்கு பொதுஜன பெரமுனவின் உயர் மட்டம் தீர்மானித்துள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசார வேலைகளை தம்மிக்க பெரேரா முன்னெடுத்துள்ளதாகவும் அதன் அடிப்படையில் அவர் யாழ்ப்பாணத்துக்கு நேற்றைய தினம் வருகை தந்துள்ளார் என்றும் அறிய முடிகிறது.

இதேவேளை இன்று தம்மிக்க பெரேரா யாழ்ப்பாணத்திலுள்ள தனது கணனி கற்கை நிறுவனத்தின் மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளார். (ந-7,10)

## சமாதான...

அடங்கிய உத்தரவுகளுக்கு நீதி அமைச்சு அனுமதியளித்துள்ளது.

நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தலைமையில் அண்மையில் இடம்பெற்ற ஆலோசனைக் குழுக் கூட்டத்திலேயே இதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த உத்தரவுகளில் சமாதான நீதவான்களின் நியமனம் இடைநிறுத்தம், அவற்றை இரத்து செய்தல் உள்ளிட்டவை தொடர்பான நெறிமுறைகள் அடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரையில் சமாதான நீதவான்களை நியமிப்பதற்கு குறிப்பிட்ட முறைமைகள் எதுவும் காணப்படவில்லை எனவும் அவர்களின் தகைமைகள் குறித்து பரிசீலிக்கப்படவில்லை எனவும் நீதி அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.(ந-7,10)


## விஞ்ஞான ஆசிரியர் தேவை

வடமராட்சி நெல்லியடிப் பிரதேசத்தில் வசிக்கும் தரம் 11 இல் கல்வி பயிலும் மாணவர் ஒருவருக்கு வீட்டிற்கு வந்து பிரத்தியேகமாக விஞ்ஞானம் கற்பிக்கக் கூடிய ஆசிரியர் தேவை.
அனுபவமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**076 097 3124**

## நாகபூஷணி திருமண சேவை

**பதிவுக் கட்டணங்கள் யாவும் இலவசம்**

**MBBS, BSc Civil Engineering, IT Professionals, CIMA, MSc, BSc, BBA, MBA, LLM, BA கற்று உயர் பதவிகளில் உள்ளோர், ஆசிரியர்கள், அரச உத்தியோகத்தர், உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் எம்மிடம் ஏராளமாக உள்ளனர். மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தெரிவு செய்யப்பட்டு, துரிதமாகத் திருமணம் நிறைவேற்றித் தரப்படும்.**

**10/2, முதலாம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ் நகர்.**
**(BCAS கம்பஸ் இற்குப் பக்கத்து லேன்)**
**021 222 9306,**
**071 999 9306, 077 138 7596**

(1359)

## வேலைவாய்ப்பு

**ஆண்/ பெண் இருபாலாருக்குமான வேலைகளுக்குமாக!**

சிட்டை(bill) எழுதக்கூடிய, விவசாயப் பராமரிப்புக்குமாக வேலைக்கும் அனுபவமுள்ள ஆண், பெண் இருபாலாரும் வேண்டப்படுகின்றனர்.

**தொடர்புகளுக்கு :**

**077 114 2672, 077 487 4737**

(122)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்மானிக்கும் சக்தியாக ஏன் தமிழர்கள் இருக்கக் கூடாது?

## பொது வேட்பாளர் தொடர்பில் சிறீதரன் எம்.பி கேள்வி

**(தருமபுரம்)**

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வரலாறு தந்திருக்கின்ற சந்தர்ப்பம் தான் தமிழ் பொது வேட்பாளர். எனவே தமிழ் பொது வேட்பாளரை இறுக பற்றி பிடித்து இந்த மண்ணில் தமிழ் இனம் யார் என்பதைக் காட்டும் சந்தர்ப்பம் இதுவே என தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.**



முல்லைத்தீவில் இடம் பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த 2005 ஆம் ஆண்டு ஒரு தலைமைத்து வத்திற்குக் கீழ் செயற்பட்டு அன்று உலகத்திற்கு ஒரு செய்தி சொல்லப்பட்டது.

அந்த செய்தியை ஜன நாயகத்தைப் பயன்படுத்த தவறியதாக சில நாடுகள் குற்றம் சுமத்துகின்றன.

யுத்தம் முடிந்தவுடன் பொன் சேகாவுக்கு ஆதரவு அளித்து அவர் தோல்வி அடைந்தார். அதற்கு பிறகு எங்களுக்காக அவர் எத னையும் இதுவரை கதைக்கவில்லை.

மைத்திரி, மகிந்த தேர் தலில் போட்டியிட்ட போது இரண்டும் எதிரி, அதில் யாருக்கு ஆதரவளிப்பது என தீர்மானித்து மைத்தி ரிக்கு ஆதரவளித்தோம். அதிலும் தோற்றோம் அடுத்து சஜீத்துக்கு ஆதரவு அளித்தோம் அங்கும் இரா ஜதந்திரம் தோல்வியடைந் தது.

நாட்டில் அரகலய போராட் டத்தைத் தொடர்ந்து டலஸ், ரணில் போட்டியிட்டபோது டலஸ்க்கு ஆதரவு அளித் தோம் அங்கும் தோல்விய டைந்தோம். மக்களிடத்தில் அபிவிருத்தி தேவையுள் ளது. மேடையில் அதைப் பற்றி நாங்கள் கதைக்க வில்லை. உரிமைக்கா கவே மக்கள் என்றும் வாக் களிக்கின்றனர். எங்கள் சுக போகத்திற்காக இல்லை.

15 வருட வரலாற்றில் அநுர, சஜித், ரணில் பேசிய வரலாறு இல்லை. ஆனால் இப்பொழுது பேசுகிறார்கள் அவர்களுக்கு தேவை ஏற் பட்டுள்ளது.

தீர்மானிக்கும் சக்தியாக இருக்கும் நாங்கள் ஏன் பொது வேட்பாளரை இறக் கக்கூடாது. 13ஐ நடை முறைப்படுத்துவது தொடர் பாக ஜெய்சங்கருடன் கதைத்தோம்.

தமிழ் நாட்டில் பொலிஸ், நிதி அதிகாரங்கள் இருக்கி றது எமக்கு இல்லை. வடக்கு மாகாண சபை முறைமை தான் 13. இதில் மாகாணத் தில் தமிழ் பேசும் அதி காரிகள் இல்லை.

பொது வேட்பாளரை கள மிறக்கும் போது வேட்பா ளர்கள் இறங்கி வருவார் கள். 13ஐ விட மேலதிகமாக ஒன்றை தருகின்றோம் என்று சொன்னால் அதைப் பற்றி யோசிப்போம் ஏற்க னவே உள்ள 13 ஐ தரு வோம் என்று சொல்கிறார் கள்.

34 வருடமாக பொலிஸ் அதிகாரம் இல்லை காணி அதிகாரம் இல்லை மத்திய அரசாங்கம் காணிகளை பிடிக்கிறது.

எனவே வரலாறு தந்தி ருக்கிற சந்தர்ப்பத்தை தவ றாது இறுக்கமாக பிடித்து இந்த மண்ணில் நாம் யார் என்பதை காட்டலாம்

தேர்தல் விஞ்ஞாபனத் தில் எமக்கானத் தீர்வை வெளியிட்டால் சிங்கள மக் களிடத்தில் செல்வாக்கு இல்லை என்றால் இந்திய, அமெரிக்க, பிரித்தானியா தூதுவருக்கு முன்பாக மறை முகமாகத் தீர்வை எழுதித் தாருங்கள் எனவும் சிறீ தரன் தெரிவித்தார். (நி-316)

# அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளை வழங்காவிட்டால் தொடர் போராட்டம்

## சுதந்திர கிராம உத்தியோகத்தர் சங்கம் எச்சரிக்கை

(அநுராதபுரம்)

கிராம உத்தியோகத்தர் களின் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளை இந்த வருடம் அதிகாரிகள் வழங்காவிட்டால் எதிர்வரும் தேர்தல்கள் பாதிக்கப்படலாம் என அகில இலங்கை சுதந் திர கிராம உத்தியோ கத்தர் சங்கம் எச்சரித்துள் ளது.

அநுராதபுரத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் சங்கத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே தேசிய அமைப்பாளர் சுஜீவ லியனகே இவ்வாறு தெரிவித் தார்.

தற்போது அங்கீகரிக் கப்பட்ட சேவை அரசியல மைப்பை வர்த்தமானியில் வெளியிடுவதை தவிர்க்கவும் மற்றும் கிராம சேவையாளர் தொழிற் சங்கத்தினால் முன் வைக்கப்பட்ட திருத்தப்பட்ட சேவைச் சட்டத்தை அங்கீ கரிப்பதற்காகவும் அனைத்து கிராம உத்தி யோகத்தர் களும் கடந்த 26 ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் இரவு 8 மணி வரை பணி பகிஷ்கரிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் கிராமிய சேவை துறையில் கடமை யாற்றும் வகையில் வழங் கப்படும் மாதாந்தம் 600 ரூபாய் கொடுப்பனவு போதாது எனவும் சுஜீவ தெரி வித்துள்ளார்.

அங்கு உரிய நடவடிக்கை கள் எடுக்கப்படாவிட்டால் நாடு முழுவதும் உள்ள 14022 கிராம சேவைப்பகுதிகளில் உள்ள 12500 கிராம உத்தி யோகத்தர்களும் தொடர் வேலைநிறுத்தப் போராட் டத் தில் ஈடுபடவுள்ளதாக அவர் மேலும் தெரிவித் தார். (நி)

# தொடருந்து அபராதங்கள் மூலம் 3 மில்லியன் ரூபாய் வருமானம்

(கொழும்பு)

தொடருந்து சட்டத்தை மீறி யமை தொடர்பான வழக்குகள் மற்றும் அபராதங்களினூடாக இந்த ஆண்டின் முதல் 6 மாதங்களில் மாத்திரம் 3 மில் லியன் ரூபாய் வருவாய் கிடைக் கப் பெற்றுள்ளதாகத் தொட ருந்து பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அதில் அதிகமான தொகை பயணச்சீட்டின்றி பயணித்தவர் களுக்கு விதிக்கப்பட்ட அபரா தத்தினூடாக கிடைக்கப் பெற் றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள் ளது.

இதன்படி பயணச் சீட்டின்றி பயணித்த 658 பேருக்கு எதி ராக வழக்குத் தாக்கல் செய் யப்பட்டு விதிக்கப்பட்ட அபராதங் களினூடாக மாத்திரம் 20 இலட் சத்து 25 ஆயிரத்து 826 ரூபாய் வருவாய் ஈட்டப்பட் டுள்ளதாக தொடருந்து பாது காப்பு அதிகார சபை தெரிவித் துள்ளது.

அத்துடன், இந்தக் காலப் பகுதியில் குறைந்த வகுப்புக ளுக்கான பயணச் சீட்டைப் பெற்று முன்னிலை வகுப் புக ளில் பயணித்த 299 பேருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட் டுள்ளது.

இதனூடாக மாத்திரம் 9 இலட்சத்து 33 ஆயிரத்து 702 ரூபாய் வருவாய் ஈட்டப்பட்டுள் ளதாக தொடருந்து பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள் ளது. (நி)


சுழிபுரம்-பறாளாய்

**ஈசுர விநாயகர் கொடியேற்றத் திருவிழா**

**01.07.2024 நாளை திங்கட்கிழமை : நேரம் காலை 10 மணியளவில்**

மஹோற்சவ குரு
பிரம்ம ஸ்ரீ சபா.வாசுதேவக்குருக்கள் அவர்கள்

சோழியூரான் பிறைசூடிக்குரு
ஆன்மீகவாதியும் சந்ததிப் பூசகரும்
பரம்பரைப் பரிபாலகரும்

(C-0703)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எத்தனை சந்தோசம் கொட்டுது இந்தியா மேலே...

## • ரி20 உலகக் கிண்ணத் தொடரில் சம்பியனாகியது
## • தென்னாபிரிக்காவின் கனவு கலைந்தது




ரி20 உலகக் கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டியில் தென்னாபிரிக்கா அணியை 7 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி இந்தியா சம்பியன் ஆனது . 11 ஆண்டுகளுக்கு பின் இரண்டாவது முறை சம்பியன் பட்டத்தை பெற்றது.

ரி20 உலகக் கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டியில் இந்தியா - தென்னாபிரிக்கா அணிகள் மோதியது.

நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி துடுப் பாட்டத்தைத் தேர்வு செய்தது.

முதலில் துடுப்பாட்டத் தைத் தொடங்கிய இந்திய அணியின் ஆரம்ப ஆட்டக் காரர்களான விராட் ஹோலி, ரோகித் சர்மா பவுண்டரிகள் அடித்து அசத்தினர். கேஷவ் மஹாராஜ் பந்துவீச்சில் 9 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். ரோகித் சர்மா. அடுத்து வந்த ரிசப்பந்த்(0) டக் அவுட் ஆனார். அடுத்து வந்த சூர்ய குமார் 3 ஓட்டங்களுடன் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். அக்ஷர் பட்டேல் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி 47ஓட்டங்கள் எடுத்தார். விராட் ஹோலி (76) நிதானமாக விளை யாடி அரைச்சதம் அடித்தார்.

20 ஓவர்கள் நிறைவில் இந் திய அணி 7 விக்கெட்டுகள் இழப்பிற்கு 176 ஓட்டங்களை எடுத்தது.

177 ஓட்டங்களை வெற்றி யிலக்காகக் கொண்டு பின்னர் களமிறங்கிய தென்னாபிரிக்க அணிக்கு ஹென்ரிக்ஸ் (4), மார்க்ரம் (4) ஏமாற்றினார். பின் குயின்ரன் (39), ஸ்ரப்ஸ் (31) கைகொடுத்தனர். கிளாசன் 52 ரன் விளாச, தென்னாபிரிக்கா எளிதாக வெல்லும் வாய்ப்பு ஏற்பட்டது. கடைசி நேரத்தில் மனம் தளராமல் போராடினர் இந்திய பந்துவீச்சாளர்கள். யான்சென் (2), மில்லர் (21), ரபாடா (4) ஆட்டமிழக்க, தென் னாபிரிக்க அணி 20 ஓவரில் 169/8 ஓட்டங்கள் மட்டும் எடுத் தது. இந்திய அணி, 7 ஓட்டங் களால் வெற்றி பெற்று இரண் டாவது முறையாக "ரி20" கிண் ணம் வென்றது.

ஹர்திக் பாண்டியா 3 விக் கெட்டுகளையும், பும்ரா, அர்ஷ் தீப் சிங் தலா 2 விக்கெட்டுக் களையும் வீழ்த்தினர்.

இதன் மூலம் 11 ஆண்டு களுக்கு பின் இரண்டாவது முறையாக சம்பியன் பட்டம் வென்றது.

**இந்தியா முழுதும் கொண்டாட்டம்**

இந்தியா சம்பியன் பட்டம் பெற்றதை நாடு முழு தும் ரசிகர்கள் உற்சாகமாக கொண்டாடி வருகின்றனர்.

# சில் சில் பிரேசிலா... சொல் சொல் நீ மின்னலா...

## கோபா கால்பந்தில் அபாரம்

கோபா கால்பந்து தொடரின் லீக் போட்டியில் பிரேசில் அணி, 4-1 என்ற கோல்கணக்கில்பராகுவேயைவீழ்த்தியது.

அமெரிக்காவில் "கோபா அமெ ரிக்கா" கால்பந்து தொடரின் 48ஆவது சீசன் நடக்கிறது. இதன் "டி" பிரிவு லீக் போட்டி யில் உலகத் தரவரிசையில் 4ஆவ தாக உள்ள பிரேசில் அணி, 58ஆவது இடத்தில் இருக்கும் பராகுவேயை சந்தித்தது. கோஸ்டாரி காவுக்கு எதிரான முதல் போட்டியில் ஒரு கோல் கூட அடிக்காத பிரேசில், நேற்று சிறப்பாக செயற்பட்டது.

போட்டியின் 31ஆவது நிமிடம் பிரேசில் அணிக்கு "பெனால்டி" வாய்ப்பு கிடைத்தது. இதை பாகுயட்டா, வீணடித்தார். இருப்பினும் அடுத்த 4ஆவது நிமிடத்தில் பிரேசிலின் வினிசியஸ் (35 வது) முதல் கோல் அடித்தார். 43வது நிமிடம் சாவியோ ஒரு கோல் அடிக்க, முதல் பாதி "ஸ்டாப்பேஜ்" நேரத்தில் மீண்டும் அசத்தினார் வினிசியஸ். இம்முறை 45+5வது நிமிடம் மற்றொரு கோல் அடிக்க, முதல் பாதியில் பிரேசில் அணி 3-0 என முன்னிலை பெற்றது.



இரண்டாவது பாதி தொடங்கியதும் பராகுவே வீரர் அல்தெரெட்டே (48ஆவது நிமிடம்) கோல் அடித்தார். போட்டியின் 65 வது நிமிடம் பிரேசில் அணிக்கு மீண்டும்"பெனால்டி" கிடைத்தது. இம்முறை பாகுயட்டா, சரியாக கோல் அடித்தார். முடிவில் பிரேசில் அணி 4-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

2 போட்டியில் தலா ஒரு வெற்றி, "டிரா" செய்த பிரேசில், 4 புள்ளியுடன் 2வது இடம் பெற்று, காலிறுதி வாய்ப்பை தக்கவைத்தது. 2 போட்டிகளில் தோற்ற பராகுவே, தொடரில் இருந்து வெளியேறியது. (7,10)

**காலிறுதியில் கொலம்பியா**

நேற்று நடந்த மற்றொரு போட்டியில் கொலம்பியா, கோஸ்டாரிகா அணிகள் மோதின. இதில் கொலம்பிய அணி 3-0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது. பங்கேற்ற 2 போட்டியிலும் வென்ற கொலம்பியா, 6 புள்ளியுடன் காலிறுதிக்கு முன்னேறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்ட ரீதியாக தொழிற்றுறை மன்றங்கள்



(யாழ்ப்பாணம்)

மாவட்ட மட்டத்தில் தொழில் முயற்சியாளர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு பெறும் நோக்கில் மாவட்ட ரீதியாக தொழிற்றுறை மன்றங்களை உருவாக்குதல் தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் யாழ்ப்பாண மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன்போது கருத்து தெரிவித்த யாழ்ப்பாண மாவட்ட பதில் அரசாங்க அதிபர்,

தொழிற்றுறை முன்னேற்றங்களை அடைவதற்கு காரணம் தொழில் முயற்சியாளர்கள் என்றும் தற்போது சர்வதேச ரீதியில் பொருட்கள் சேவைகளை ஏற்றுமதி செய்யும் அளவிற்கும் இதற்கு மேலாக வெளிநாட்டவர் எமது நாட்டு உற்பத்திகளை கொள்வனவு செய்யும் அளவிற்கும் பிரபல்யம் அடைந்துள்ளமைக்கு தொழில் முயற்சியாளர்களே காரணம் என தெரிவித்தார்.

அத்துடன் உதவி வழங்குவதற்காக பல தொழிற்றுறை திணைக்களங்கள் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் உள்ளதாகவும் அவர்களுடன் இணைந்து தொழில் முயற்சியாண்மையை பதிவு செய்வதற்கான நியமங்கள் மற்றும் வரையறைகள் தொடர்பான தெளிவூட்டல்களை பெறமுடியுமென குறிப்பிட்டதுடன் பல சவால்களை எதிர்கொண்டு தொடர்ந்து முன்னோக்கி பயணிக்கும் முயற்சியாளர்களுக்கு பாராட்டுக்களையும் தெரிவித்தார்.

தொடர்ந்து இக் கலந்துரையாடலில் தொழில் முயற்சியாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டன.

இக் கலந்துரையாடலில் தொழிற்றுறை திணைக்கள மாகாண பணிப்பாளர், மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர், தொழிற்றுறை திணைக்கள உதவி செயலாளர், தொழிற்றுறை திணைக்கள மாவட்ட உத்தியோகத்தர், பிரதேச செயலக தொழிற்றுறை திணைக்கள உத்தியோகத்தர்கள், யாழ்ப்பாண வர்த்தக சங்க தலைவர், சிறு தொழில் முயற்சியாளர்கள் மற்றும் துறைசார் உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர்கலந்துகொண்டனர். (நி-33)

# சீன ஜனாதிபதியை சந்தித்த மகிந்த

(பீஜிங்)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங்கை சந்தித்துள்ளார்.

குறித்த சந்திப்பு தொடர்பான காணொளியொன்று எக்ஸ் தளத்தில் பதிவிடப்பட்டுள்ளது.

அதன்படி, சீன தலைநகர் பீஜிங்கில் சகவாழ்வு கோட்பாடுகளின் 70 ஆவது ஆண்டு நிறைவு மாநாட்டில் கலந்து கொண்ட போதே மகிந்த சீன ஜனாதிபதியை சந்தித்துள்ளார்.

சீன வெளியுறவு அமைச்சரின் அழைப்பின் பேரில் கடந்த வியாழக்கிழமை மகிந்த ராஜபக்ஷ உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டார்.

இதன்படி இந்த விஜயத்தின் போது இலங்கைக்கு நன்மை பயக்கும் வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் இலங்கையின் கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தம் குறித்தும் மகிந்த ராஜபக்ஷ கலந்துரையாடவுள்ளதாக தகவல்கள் வெளியாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# ரூபாவின் பெறுமதி அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த ஆறு மாதங்களில் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 7.3 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி விடுத்துள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கடந்த மே மாதத்தில் மாத்திரம் ரூபாவின் பெறுமதி 1.7 சதவீதம் வீழ்ச்சி அடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி)

# ஆமணக்கு விதையை உண்ட 8 சிறுவர்கள் வைத்தியசாலையில்

(மன்னார்)

ஆமணக்கு விதையை சாப்பிட்டால் ஏற்பட்ட ஒவ்வாமை காரணமாக 8 பாடசாலை மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தட்சணாமருதமடு பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் இக்குழந்தைகள் ஆமணக்கு விதையை சாப்பிட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

9 வயதுடைய ஆண் குழந்தையொன்றும் 7 பெண் குழந்தைகளும் பாதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவர்கள் மடு பகுதியைச் சேர்ந்த சிறுவர்கள் என்பதுடன் மடு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி)



யா/இராமநாதன் கல்லூரியில் 2023 ஆம் ஆண்டு பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியுள்ள மாணவர்களுக்கான கௌரவிப்பு விழா கடந்த செவ்வாய்க்கிழமை பாடசாலையின் அதிபர் திருமதி. அ.சிவஞானம் தலைமையில் இடம்பெற்றது.

# மன்னார் துறைமுக முனைய நிர்மாண பணிகளுக்கான விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளன

(கொழும்பு)

மன்னார் துறைமுக முனைய நிர்மாணப் பணிகளுக்கான விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளதாக துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய மன்னார் துறைமுகத்தில் 300 மீற்றர் நீளமான முனையம் நிர்மாணிக்கப்படவுள்ளதாக துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சின் செயலாளர் கே.டி.எஸ் ருவன்சந்திர தெரிவித்துள்ளார்.

இதற்காக உள்ளூர் முதலீட்டாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக மேலும் தெரிவித்துள்ளார்.

முனையத்தின் நிர்மாணப் பணிகளின் பின்னர் இந்தியா - இலங்கைக்கு இடையில் பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்துக் கப்பல் சேவையை முன்னெடுப்பதற்கான வசதிகள் இலகுவாக்கப்படுமென்றும் துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

இதேவேளை மன்னார் துறைமுகத்தை சர்வதேச துறைமுகமாக அறிவித்து அரசாங்கத்தினால் வர்த்தமானி வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# கலைவாரிதி, இளம்கலைஞர் விருதுகளுக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தீவுகள் தெற்கு வேலணை பிரதேச கலாசாரப் பேரவையினால் கலை, இலக்கியத் துறைகளில் சேவையாற்றிய வர்களுக்கு வழங்கப்படும் விருது தான கலைவாரிதி விருது, இளம் கலைஞர் விருது-2024 ஆகியவற்றிற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வேலணை பிரதேச செயலாளர் பிரிவில் நிரந்தரமாக வசித்து வரும் கலை, இலக்கியத் துறைகளில் சேவையாற்றி வருகின்ற 60 வயதிற்கு மேற்பட்ட கலைஞர்கள் கலை வாரிதி விருதிற்கும் 25 தொடக் கம் 40 வயதிற்கும் இடைப்பட்ட இளம் கலைஞர்கள் இளம் கலைஞர் விருதிற்கும் விண் ணப்பிக்க முடியும்.

இதுவரை இவ்விருதினை பெற்றுக் கொள்ளாத விண்ணப்பிக்க விரும்பிய தகுதியுடைய கலைஞர்கள் வேலணை பிர தேச செயலக கலாசாரப் பிரிவில் விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று பூரணப்படுத்தி பிரிவு கிராம சேவையாளரிடம் உறுதிப்படுத்தி கலைச் சேவையினை உறுதிப்படுத்தும் ஆவணங்களையும் இணைத்து எதிர்வரும் 15.07.2024 இற்கு முன்னர் வேலணை பிரதேச கலாசாரப் பிரிவில் ஒப்படைக் குமாறு கேட்டுக் கொள்வதுடன் தகுதியான கலைஞர்கள் கலாசாரப் பேரவையின் தெரிவுக் குழுவினால் தெரிவு செய்யப்பட்டு வேலணை பிரதேச பண்பாட்டுப் பெருவிழா-2024 இல் விருது வழங்கிக் கௌரவிக் கப்படுவார்கள் எனவும் தீவுகள் தெற்கு வேலணை பிரதேச செயலாளரும் கலா சாரப் பேரவைத் தலைவரு மான க.சிவகரன் தெரிவித்துள்ளார். (நி)

# கடலில் மிதந்த திரவத்தை குடித்த மீனவர்கள் உயிரிழப்பு

(கொழும்பு)

கடலில் மிதந்து வந்த போத்தலில் இருந்த திரவத்தை மதுபானம் என நினைத்து குடித்த இரண்டு கடற்றொழிலாளர்கள் உயிரிழந்துள்ளனர்.

குறித்த சம்பவமானது நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தங்காலை மீன்பிடித் துறைமுகத் திலிருந்து மீன்பிடி நடவடிக்கைகளுக்காகப் புறப்பட்ட "டெவோன்" என்ற பல்நாள் மீன்பிடிக் கப்பலின் இருந்த மீனவர்களே இந்த சம்பவத்திற்கு முகங்கொடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில், சம்பவத்தில் இருவர் உயிரிழந்துள்ளதுடன் நால்வரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

யாழ்.தொழில்நுட்பவியல் கல்லூரியில் உள்நாட்டு வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கனை பெற்றுக் கொள்ளக் கூடியதான வெளிக்களப் பயிற்சியுடன் கூடிய பராமரிப்பாளர் (Caregiver) மொபைல் போன் றிப்பயறிங் (Mobile Phone Repairing) சோலர் பிவி சிஸ்ரம் இன்ஸ்ரோலர் (solar pv system installer) கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. மேலும் கணிய அளவை உதவியாளர் மோட்டார் சைக்கிள் ஸ்கூட்டர் பழுது பார்த்தல், ஆடை தைத்தல், தொழில்நுட்பம், அலுமினியம் பொருத்துநர், கணனி வலையமைப்புக்கான சான்றிதழ் போன்ற NVQ மட்டம் 4 தர இலவசக் கற்கை நெறிளுக்கு மேலதிகமாக சில மாணவர்களை அனுமதிக்கக் கூடியதாக உள்ளது. பயில விரும்புவோர் பணிப்பாளர் தொழில்நுட்பவியல் கல்லூரி யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

மேலதிக விபரங்களுக்கு நேரடியாக தொழில்நுட்பவில் கல்லூரியின் தொழில்வழிகாட்டல் நிலையத்துடன் அல்லது 021 222 0028, 021 221 2358 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக தொடர்பு கொள்ளலாம் என அதன் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (நி)


**லங்கா மஹால் (PVT) LTD**

DHL **உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை**

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு : **0091956615 6719**

WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.

**077 839 3974**

(3344)



सत्यमेव जयते

# Consulate General of India Jaffna

**Advt. No. JAF/ADM/578/02/2024**

The Consulate General of India, Jaffna is looking for a suitable candidate for filling up one (1) vacancy of the post of "Marketing Executive". Only Sri Lankan Nationals of age limit 35 years with minimum Graduation level Qualification can apply. Details of the vacancy and the application form are available on Consulate's web site https://www.cgijaffna.gov.in

Interested candidates are requested to download the application form and submit the completed form by Post or in person to **Head of Chancery, Consulate General of India, at 14, Maruthady Lane, Nallur, Jaffna by 15th July, 2024**

(c-698)


# நூற்றாண்டு விழா

(சாவகச்சேரி)

நாதஸ்வரமேதை இசைப்பேரறிஞர் கலாநிதி எம்.பஞ்சாபிகேசனின் நூற்றாண்டு விழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. மருத்துவர் சு.சி.அருளானந்தம் தலைமையில் இடம்பெறவுள்ள மேற்படி நிகழ்வானது செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகனுடைய ஆசியுரைகளுடன் ஆரம்பமாகவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறீசற்குணராஜாவும், சிறப்பு விருந்தினர்களாக வாழ்நாள் பேராசிரியர் என்.சண்முகதாஸ், பேராசிரியர் என்.சண்முகலிங்கன், சட்டத்தரணி கேசவன் சயந்தன் மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளர் திருமதி கருணாகிருபாசக்தி ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (நி-30-33)

# நாய்களுக்கான விலங்கு விசர்நோய் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள நல்லூர் பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய் தடுப்பூசி (ARV) கீழ்வரும் இடங்களில் வைத்து தடுப்பூசி ஏற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசியை பெற்றுக் கொள்ளுமாறு யாழ்.மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். (நி)

| திகதி | நேரம் | தடுப்பு மருந்து ஏற்றப்படும் நிலையத்தின் பெயர் |
|---|---|---|
| 02.07.2024 | மு.ப 9 - 11 | மூத்த விநாயகர் சனசமூக நிலையம் |
| | மு.ப 11 - 1 | ஆசீர்வாதப்பர் வீதி சுகாதார கல்வி மையம் |
| | பி.ப 2.30-4 | நாயன்மார் வீதி சுகாதார கல்வி மையம் |
| 03.07.2024 | மு.ப 9 - 11 | யாக்கோவா பாலர் பாலர் பாடசாலை |
| | மு.ப 11 - 1 | வெயிலுகந்த பிள்ளையார் கோவில் செம்மணி வீதி |
| | பி.ப 2.30-4 | கடுக்காய் வீதி |
| 04.07.2024 | மு.ப 9 - 11 | நாவலர் வீதி ஆணைப்பந்தி சந்தி |
| | மு.ப 11 - 1 | பருத்தித்துறை வீதி உயர்கல்லூரி அருகாமை |
| | பி.ப 2.30-4 | அரசடி ஜனசக்தி சனசமூக நிலையம் |
| 05.07.2024 | மு.ப 9 - 11 | பழம் வீதி ஞானசோதி சனசமூக நிலையம் |
| | மு.ப 11 - 1 | சிவன் புது வீதி |
| | பி.ப 2.30-4 | மணல்தரைலேன் |
| 08.07.2024 | மு.ப 9 - 11 | ஜமுனா வீதி கல்வி நிலையம் மையம் |
| | மு.ப 11 - 1 | சங்கிலியன் மன்றம் பருத்தித்துறை வீதி |
| | பி.ப 2.30-4 | செட்டியார் தோட்டம் |
| 09.07.2024 | மு.ப 9 - 11 | வைமன் வீதி எடிசன் அக்கடமி அருகாமை |
| | மு.ப 11 - 1 | அம்மன் வீதி |
| | பி.ப 2.30-4 | முத்தமிழ் முன்பள்ளி ஆடியபாதம் வீதி |
| 10.07.2024 | மு.ப 9 - 11 | சங்கிலியன் வீதி |
| | மு.ப 11 - 1 | கொண்டலடிச்சந்தி |
| | பி.ப 2.30-4 | கோவில் வீதி பண்டாரக்குளம் |
| 11.07.2024 | மு.ப 9 - 11 | செட்டித்தெரு நல்லூர் முருகன் சனசமூக நிலையம் |
| | மு.ப 11 - 1 | நல்லூர் குறுக்குத்தெரு சந்தி |
| | பி.ப 2.30-4 | கைலாயப்பிள்ளையார் கோவிலடி கோயில் வீதி |
| 12.07.2024 | மு.ப 9 - 11 | துர்க்கா மணிமண்டபத்தடி கோவில் வீதி |
| | மு.ப 11 - 1 | பண்டாரக்குளம், இந்துமாமன்றம் |
| | பி.ப 2.30-4 | கொண்டலடி, குமார வீதி |

# இராசிபலன்

**30.06.2024**
**ஆனி 16, ஞாயிற்றுக்கிழமை**
**நவமி பிற்பகல் 1.41 மணிவரை**

**ரேவதி முற்பகல் 9.16 மணிவரை**
**சுபநேரம் 8.56-10.26 மணி வரை**
**இராகுகாலம் 4.26-5.56 மணிவரை**

**சந்திராஷ்டமம்- மகம்**

**வளவன்**


மேஷம்

எதிர்பார்க்காமல் செய்த வேலையொன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம், கனவுப் பலிதமுண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், போசன சுகமுண்டு


கடகம்

குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு, சுபசெய்திகள் வந்து சேரலாம்.


துலாம்

செல்லும் இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.


மகரம்

பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.


ரிஷபம்

விருப்பங்கள் நிறைவேற கண்ணனை வழிபட வேண்டிய நாள், ஆதாயமில்லாத அலைச்சல்கள் இடம்பெறலாம், சுபவிரயங்கள் மேலோங்கும் நாள்.


சிம்மம்

ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.


விருச்சிகம்

பொது வாழ்வில் புகழ் கூடும் நாள், வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள், பயணங்களால் பலனுண்டு, திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.


கும்பம்

பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகலாம், குடும்பப் பொறுப்புக்கள் கூடும், காரிய அனுகூலமுண்டு, பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள்.


மிதுனம்

எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், தனவரவு திருப்தி தரும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.


கன்னி

மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை, வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள்.


தனுசு

கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், நெடுநாளைய கனவுகள் நனவாகலாம்.


மீனம்

எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள்.

**கோபத்தைப் [illegible] மீறாமல் பார்த்துக் கொள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
நாதம் 448
Viber 076 636 3378



# பாலம் அமைத்தால்

# பறிபோகுமா இலங்கை?

தற்கால உலகம் போர் நிறைந்த ஒன்றாகக் காணப்பட்டாலும் பல விசித்திரமான விடயங்களை தன்னகத்தே கொண்டிருக்கிறது. உலக நாடுகள் பல எதிரும் புதிருமாக நிற்பதற்கு இரு நாட்டு எல்லைகள் செல்வாக்கு செலுத்துகின்றன.

இதற்கு இந்தியா-சீனா, இந்தியா-பாகிஸ்தான் போன்ற நாடுகளைக் குறிப்பிடலாம். எல்லைப் பிரிவுகளின் ஊடாக இந்த நாடுகள் முட்டி மோதிக் கொண்டு தான் இருக்கின்றன.

ஆயினும் மேற்கத்தேய நாடுகள் சிலவற்றின் எல்லைபிரிப்புக்கள் மிகவும் விசித்திரமாகவும் சுவாரஸ்யமாகவும் இருக்கின்றன. இவற்றைக் கேள்விப்படும் போது அடடா இரு நாட்டு எல்லைப் பிரிப்பிற்குள் இவ்வளவு ஒற்றுமையும் புரிந்துணர்வும் இருக்கிறதா என வியந்து பார்க்கும் படி உண்டாயினும் எம்மால் வியக்க மட்டுமே முடியும். எமது நாட்டில் இவ்வாறான புரிதல்கள் நடப்பதற்கு பல நூறு வருடங்கள் கடக்க வேண்டி இருக்கும்.

அந்த வகையில் ஸ்பெயின், மொராக்கோ மற்றும் நெதர்லாந்து, பெல்ஜியம் ஆகிய நாடுகளின் எல்லலப் பிரிப்பு ஒரு உணவகத்திற்கு நடுவே இடப்பட்டிருக்கும் கோடு என்றால் உங்களால் நம்ம முடிகிறதா? ஆனால் அது தான் உண்மை.



அதே போல் அமெரிக்கா- மெக்சிக்கோ நாடுகளின் எல்லைச் சுவர், இரு நாட்டவர்களும் கரப்பந்தாட்டம் விளையாடும் எல்லையாக காணப்படுகிறது எனின் அந்நாட்டு மக்களின் புரிந்துணர்வை புரிந்து கொள்ள முடியும்.

நோர்வே-சுவீடன் நாட்டைப் பிரிக்கும் எல்லை நீண்ட வீதி ஒன்று தான். வீதியின் வலப்பக்கம் நோர்வே. இடப்பக்கம் சுவீடன். கனடா- அமெரிக்க நாடுகளைப் பிரிக்கும் எல்லை நிலப்பரப்பில் இடப்பட்டிருக்கும் + அடையாளம் மட்டுமே

இதே போல ஆஸ்திரியா, ஸ்லோவாக்கியா, ஹங்கேரி ஆகிய மூன்று நாடுகளும் ஒன்றிணையும் இடம் மூன்று பக்கமும் அமரக் கூடிய மேசை வடிவில் உள்ளது.

இவ்வாறு உலகின் பல நாடுகளில் தமது எல்லைகளை மிக எளிமையாக எல்லையிட்டிருக்கிறார்கள். அந்நாடுகள் பொருளாதார ரீதியிலும் உச்சத்தில் இருக்கவே செய்கின்றன.

ஆனால் எம்மிடம் அவ்வாறான பக்குவம் இல்லை. எல்லை தாண்டிய மீன்பிடி என்பது எமக்கும் இந்தியாவுக்கும் இடையில் பாரிய விரிசலை ஏற்படுத்தி இருப்பதை நாம் இப்போது உணர்ந்து கொண்டிருக்கின்றோம்.

இலங்கை-இந்தியா தொடர்பென்பது இன்று நேற்று வந்த தொடர்பல்ல. அது எமது வரலாற்றுடன் தொடர்புடைய ஒன்று.

இந்தியா-இலங்கை உறவை இதிகாச புராணமான இராமயணத்தின் ஊடாக பார்க்க முடிகிறது. இராவணன் பிடியில் இருந்த சீதையை மீட்க இராமன் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு பாலம் அமைத்து வந்ததாக இராமாயணம் கூறுகிறது.

அப்பாலம் இன்று வரை இராமர் பாலம் என அழைக்கப்படுகிறது. இந்தியாவின் தனுஷ்கோடியில் இருந்து இலங்கையின் தலைமன்னார் வரை கடல் ஆழம் இரண்டு மீற்றரில் இருந்து பத்துமீற்றர் வரையானது என்பது இராமர் பாலத்தை வலுப்பெறச் செய்வதாக உள்ளது.

இந்நிலையிலேயே இலங்கை இந்தியாவுக்கிடையிலான தரை வழிப்பாதை உருவாக்கம் தொடர்பில் ஆக்கபூர்வமான கருத்துக்கள் இரு நாட்டு அரசிடமிருந்தும் எழத் தொடங்கியுள்ளது.

இராமேஸ்வரம் தொடங்கி தலைமன்னார் வரை இரு நாடுகளையும் இணைக்கும் பாலத்தை அமைக்க இரு நாடுகளும் ஒத்துப் போகும் நிலையில் அதை எதிர்க்கும் சக்திகள் எதிர்ப்பை வெளியிடத் தொடங்கியுள்ளனர்.

வழமையாக ஒரு திட்டத்திற்கு எதிர்ப்பென்பது முதலில் அரசியல் தளத்திலே உருவாகும்.

ஆனால் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான தரைவழிப்பதை உருவாக்கத்திற்கு எதிராக முதல் குரலாக ஆன்மிகத் தலைவர் ஒருவர் குரல் உயர்த்தி உள்ளார். ஆம், இத்திட்டத்தினை அமுல்படுத்தினால் இலங்கை இந்தியாவின் ஒரு பகுதியாக மாறும் என பேராயர் கர்த்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்திருக்கிறார்.

நிகழ்வொன்றில் பேசிய அவர் இலங்கை இந்திய தரை வழிப்பாதை அமைப்பு இலங்கையின் இறையாண்மைக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் இரண்டாயிரம் வருட சுதந்திரம் இப் பாதை அமைப்பின் ஊடாக பாதிக்கப்படும் அபாயம் உள்ளதென்றும்தெரிவித்திருக்கின்றார்.

பேராயரின் குறித்த கருத்து வியப்பை ஏற்படுத்தும் வகையில் உண்டாயினும் தமிழ்மக்களுக்கு நிரந்தர தீர்வு வழங்கப் பட்டுவிடக் கூடாது என்ற உள்நோக்கம் அவரின் கருத்துக்குள் புதைந்து கிடப்பதை நாம் புரிந்து கொள்ள முடியும்.

இலங்கை ஆட்சியாளர்களால் ஈழத் தமிழினம் பட்ட இன்னல்கள் கொஞ்சநஞ்சமல்ல. தமிழினத்தின் உரிமைகளை பறித்து அவர்களின் வளங்களைச் சூறையாடி அவர்களின் இன, மத அடையாளங்களை அழித்து அதில் பௌத்தத்தை திணிக்க முற்படும் ஆட்சியாளர்களின் குரோதத் தன்மையை ஏற்றுக் கொண்டவர்களாலேயே இவ்வாறான கருத்துக்களை முன்வைக்க முடியும்.

> ❝ **தமிழினத்தின் உரிமைகளை மறுத்து அவர்களின் வளங்களைச் சூறையாடி அவர்களின் இன, மத அடையாளங்களை அழித்து அதில் பௌத்தத்தை திணிக்க முற்படும் ஆட்சியாளர்களின் குரோதத்தை ஏற்றுக் கொண்டவர்களாலேயே இவ்வாறான கருத்துக்களை முன்வைக்க முடியும்.**

ஏனெனில் வன்னிப் பெரு நிலப்பரப்பின் பயங்கரவாதத்தை அழிப்பதாய்க் நடத்தப்பட்ட போரில் பல்லாயிரக்கணக்கான அப்பாவிப் பொது மக்கள் கொல்லப்படும் போது மௌனமாய் இருந்த பேராயர் இலங்கை, அரசியல் சீர்திருத்தத்தை மேற்கொள்ளும் போது அது பௌத்தத்தைப் பாதிக்காத வகையில் உருவாக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்திருந்தார்.

தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்படும் அட்டூழியங்களை கருத்தில் எடுக்காத பேராயர் இந்திய இலங்கைக்கிடையே தரைவழிப்பாதை அமைத்தால் அது இலங்கையில் இறையாண்மையைப் பாதிக்கும் என தெரிவிப்பதற்குள் இருக்கும் இன ஓரவஞ்சகத்தனத்தை என்னவென்று கூறிவிட முடியும். இலங்கை இந்திய தரை வழிப்பாதை அமைத்தால் அதனால் பயன்பெறப் போவது தமிழ் மக்கள். அத்துடன் இலங்கையில் போர் நிறைவு பெற்றுவிட்டது. 13 ஆவது திருத்தச் சட்ட மூலத்தை எப்படியாவது நிறைவேற்றி விட இந்தியா பிரயத்தனம் செய்கிறது.

இவை அனைத்தையும் வைத்துப் பார்த்தால் அது தமிழ் மக்களின் நலன் சார்ந்திருக்கிறது. அதை எவ்வாறாயினும் தடுத்தாக வேண்டும் என்ற குறுகிய சிந்தனையைத் தவிர்த்து, அனைத்து இன மத மக்களும் இந்த நாட்டின் குடிமக்களே. அவர்கள் அனைவருக்கும் கிடைக்க வேண்டிய அதிகாரங்கள் அனைத்தும் கிடைக்க வேண்டும் என சிந்தையில் கொள்வதே நல்லது.

மேற்கத்தேய நாடுகளில் இருக்கும் இரு நாட்டு எல்லைகளின் எளிமைத் தன்மை எம்மிடம் இல்லையாயினும் எல்லைக் கோட்டில் ஏட்டிக்குப் போட்டி காட்டாமல் நாட்டை முன்னேற்றும் செயலில் நாம் அனைவரும் ஈடுபடுவதே சிறந்தது.

**அபிமன்யு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகப்போரும் ஊழி உலகும்

**“தீபாவளியன்று மழை பெய்யும். அக்னி நட்சத்திர காலத்தில் மழையே பெய்யாது” என்றெல்லாம் கால காலமாக சில கணக்குகள் வைத்திருப்போம். இவை எல்லாமே ஆட்டம் கண்டு கொண்டிருக்கின்றன இப்போது**

ரஷ்யா-உக்ரைன் போர், இஸ்ரேல்-பாலஸ்தீனப் போர். இவை தொடர்பான செய்திகளைப் படித்தால் 'ஏன்தான் இந்தப் போர் வெறியோ' என்று கருத்து சொல்லிவிட்டு பலரும் அவரவர் வேலையைப் பார்க்கச் சென்று விடுவார்கள். நாம் உக்ரைனிலோ, பாலஸ்தீனத்திலோ இல்லை. 'இது நமக்கு நேரடியாகத் தொடர்புள்ள பிரச்சினை அல்ல. இந்தப் போர் நம்மை பாதிக்கிற ஒன்றல்ல' என்ற எண்ணம்தான் இதற்குக் காரணம்.

ஆனால், உலகில் எந்த இரு நாடுகளுக்கிடையே போர் நடந்தாலும் அது நம்மை நிச்சயம் பாதிக்கும். உக்ரைன் நாட்டுச் சுற்றுச்சூழல் அமைச்சகமும் உலக வெப்பமாதல் தொடர்பாக அங்குள்ள அரசு சாரா அமைப்புகளும் சமீபத்தில் வெளியிட்டுள்ள அறிக்கை, கடந்த இரண்டு வருடங்களாக நடந்துவரும் ரஷ்யா-உக்ரைன் போர் காரணமாக 17.5 கோடி தொன் கார்பன் டை ஒக்சைடு காற்று மண்டலத்தில் கலந்திருக்கிறது என்று கவலையுடன் சொல்கிறது. இது கிட்டத்தட்ட ஒன்பது கோடி கார்களில் இருந்து வெளிப்படும் வருடாந்திர நச்சு வாயுவுக்குச் சமம்!

போர் காரணமாக ஏன் அவ்வளவு கார்பன் டை ஒக்சைடு உருவாக வேண்டும்? இதற்குப் பல காரணங்கள்.

முக்கியமாக, இராணுவ வாகனங்களுக்கு கோடிக் கணக்கான லீற்றர் எரிபொருள் தேவைப்படுகிறது. ரஷ்ய இராணுவம் 35 மில்லியன் தொன் கார்பன் டை ஒக்சைடையும், உக்ரைன் இராணுவம் ஒன்பது மில்லியன் தொன் கார்பன் டை ஒக்சைடையும், தங்கள் இராணுவ வாகனங்களுக்குப் போடும் எரிபொருள் மூலமாக உருவாக்கியுள்ளன. உலகெங்கும் அனைத்து நாடுகளின் இராணுவங்கள் பயன்படுத்தும் எரிபொருள் காரணமாக 5.5% பசுமைக்குடில் வாயுக்கள் உருவாகின்றன.

பெரும் போர்களின்போது கோடிக்கணக்கான விளை நிலங்களும் காடுகளும் எரிக்கப்படுகின்றன. எதிரி நாட்டுக்கு பெரும் சேதம் விளைவிக்க வேண்டும் என்பதற்காக அங்குள்ள பெட்ரோல் கிணறுகள் கொளுத்தப்படுகின்றன.

போரில் பயன்படுத்தும் துப்பாக்கி குண்டுகள், கையெறிகுண்டுகள், கிளஸ்டர் குண்டுகள் போன்றவை எல்லாம் காற்று மண்டலத்தில் தேவையற்ற நச்சுக்களைச் சேர்க்கின்றன. அதுமட்டுமல்ல, போருக்குப் பிறகு சிதிலமடைந்த பகுதிகளைச் சீரமைக்கும் முயற்சிகளின் போதும் கார்பன் டை ஆக்சைடு வெளிப்படுகிறது.

இரு போரிடும் நாடுகளுக்கும் இடையே விமானப் போக்குவரத்து இருக்காது. பிற நாடுகளின் விமானங்கள் அந்த வான்வழியில் பறக்க முடியாது. எனவே அந்த விமானங்கள் வேறுவழியில் சுற்றிவளைத்துச் சென்றாக வேண்டும். இதன் காரணமாகவும் எரிபொருள் அதிகம் செலவாகும். கார்பன் டை ஒக்சைடு அதிகம் உருவாகும்.



World Population Review and the Global Carbon Project ஆகியவை அளிக்கும் தகவல்களின்படி மிக அதிகமான கார்பன் டை ஒக்சைடை ஆண்டுதோறும் உருவாக்கும் மூன்று நாடுகள் சீனா, அமெரிக்கா மற்றும் இந்தியா. இதற்கு முக்கியக் காரணம், இவை நிறைய மக்கள்தொகை கொண்டவையாக இருப்பதும், அதிக அளவில் தொழிற்சாலைகள் கொண்டவையாக இருப்பதும்தான்.

சீனாவின் முக்கியத் தொழில்களும் இறக்குமதிகளும் நிலக்கரி போன்ற புதைபடிம எரிபொருள்களைக் கொண்டதாகவே அமைந்துள்ளன. அமெரிக்காவில் மின்சார உற்பத்தி, பெற்றோலியப் பயன்பாடு ஆகிய காரணங்களால் இது மேலும் அதிகமாகிறது. தவிர மிகவும் மாறுபடும் வெப்பநிலை காரணமாக, ஏ.சி, ஹீட்டர் போன்றவை மாறி மாறி அதிக அளவில் பயன்படுத்தப்படுகின்றன.

கரியமில வாயு போன்ற பசுங்குடில் வாயுக்கள் காரணமாக பல ஆபத்துகள் இருக்கின்றன. வெப்பநிலை மாறுகிறது. சுவாச நோய்கள் உண்டாகின்றன. காற்று அசுத்தமடைகிறது. காட்டுத்தீப் பற்றுவது அதிகமாகிறது.

'தீபாவளியன்று மழை பெய்யும். அக்னி நட்சத்திர காலத்தில் மழையே பெய்யாது' என்றெல்லாம் காலகாலமாக சில கணக்குகள் வைத்திருப்போம். இவை எல்லாமே ஆட்டம் கண்டு கொண்டிருக்கின்றன. 'எப்போ வெயில் அடிக்கும் எப்போ மழை பெய்யும் என்றே சொல்ல முடியவில்லை' என்று பலரும் புலம்புவதைக் கேட்கிறோம். அதற்கு முக்கிய காரணம் இந்தப் பசுங்குடில் வாயுக்கள் அதிகரிப்பு.

அதிக எரிபொருள் பயன்பாடு காரணமாக ஒட்டுமொத்தமாக பூமியின் வெப்பம் அதிகமாகி இருக்கிறது. மிக வெப்பமான பத்து வருடங்கள் என்பவை, இந்த நூற்றாண்டில்தான் வந்து போயிருக்கின்றன. வெப்ப அலையின் தாக்கத்தால் மரணங்கள் ஏற்படுவதும் அதிகரித்துள்ளது.

பெற்றோல், டீசல் போன்றவை புதை படிமங்களிலிருந்து பெறப்படுபவை. அவற்றைத் தயாரிக்கும்போதும் பயன்படுத்தும்போதும் வெளியாகும் கரியமில வாயு, மீத்தேன் போன்றவை காற்றுவெளியில் கலந்து, காற்றின் தன்மையை மாற்றுகின்றன. இதன் காரணமாக சூரிய ஒளி பூமியை அடைவது நின்றுவிடுவதில்லைதான். ஆனால் காற்று மண்டலத்தினூடாக வெளியேற எத்தனிக்கும் அகச்சிவப்புக் கதிர்கள் வெளியேற முடியாமல் இவற்றினால் பிடிக்கப்பட்டு, சூரிய வெப்பம் விண்வெளியை அடைய முடியாதபடி தடுக்கப்படுகிறது இதன் காரணமாக பூமி வெப்பமடைகிறது. பசுங்குடில் வாயுக்களில் கிட்டத்தட்ட முக்கால் பங்கு வகிக்கிறது கரியமில வாயு. இயற்கைப் பேரழிவுகளால் உலகின் வெப்பநிலை மாறுவதை நம்மால் முழுவதும் தடுக்க முடியாதுதான். ஆனால் போர் போன்ற செயற்கைப் பேரழிவு களையாவது நிறுத்தலாமே!

'புரிகிறது. ஆனால், தனிநபராக நான் என்ன செய்துவிட முடியும்? போர்களைத் தடுத்து நிறுத்துவது என் கையிலா இருக்கிறது?' என்று பரிதவிக்கிறீர்களா? நம்மால் முடிந்ததைச் செய்யலாம். அருகில் இருக்கும் இடங்களுக்கு நடந்தோ மிதிவண்டியிலோ செல்லலாம். தொலைவில் உள்ள இடங்களுக்குப் பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்தலாம். அல்லது மின்சாரத்தில் ஓடும் வண்டியைப் பயன்படுத்தலாம். ஏ.சி பயன்பாட்டைக் குறைத்துக்கொள்ளலாம். சூரிய ஒளியிலிருந்து பெறப்படும் மின்சாரத்தைப் பயன்படுத்திக்கொள்ளலாம். குளிர்சாதனப் பெட்டி, வாட்டர் ஹீட்டர், ஏ.சி போன்றவற்றைப் புதிதாக வாங்கும்போது அவற்றின் மேல் 'எனர்ஜி ஸ்டார்' லேபிள் இருக்கிறதா என்பதை உறுதிசெய்துகொள்ளலாம். மின்னணுப் பொருள்களைப் பயன்படுத்தாதபோது அவற்றின் பிளக்கை மின் இணைப்பிலிருந்து நீக்கிவிடலாம். வீட்டில் உள்ள குண்டு பல்புகளை நீக்கிவிட்டு எல்.இ.டி பல்புகளைப் பொருத்தலாம்..

இவற்றில் பெரும்பாலானவை உங்களுக்கு ஏற்கெனவே தெரிந்திருக்க வாய்ப்புண்டு. ஆனால் எவ்வளவு தூரம் கடைப்பிடிக்கிறீர்கள் என்பதைக் கொஞ்சம் சுய ஆராய்ச்சி செய்து மேம்படுத்தி, காலரைத் தூக்கி விட்டுக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழ் தேசிய ...... என்றால் என்ன? அவர்கள் யார் வியாசரே?

**சுதன் — குப்பிளான்**

**போட்டி போடாமல் பதவிக்கு வந்தே இந்த காட்டாப்பு என்றால் போட்டி போட்டு வென்று வந்திருந்தால்?**

போட்டி போட்டு வெல்ல இயலாது எனத் தெரிந்து கொண்டு போட்டி போடாமல் வெல்வதற்கு போட்டியாளர்களுக்கு பாட்டி வைத்து பாட்டியினூடே பல லூட்டிகள் அடித்து போட்டி போடுவது போல போட்டி போட்டு, வெல்வது போல வென்று அதற்கொரு பேட்டி கொடுத்து தம்மைக் கூட்டிவர பல சூட்டிகளை சூட்டி அழகுபார்ப்பவர்கள் வென்றாலென்ன வெல்லாவிட்டாலென்ன.

**மதுவன் — மீசாலை**

**கணவனின் கட்டுப்பாட்டுக்கு அடங்காத மனைவியைப் பற்றிக் கூறுங்கள் வியாசரே?**

நேர் வழியில் செல்லும் மாடு திடீரென குறுக்கே இழுக்கிறது என வைத்துக் கொள்ளுங்கள். முடிந்த வரை மாட்டின் கயிற்றை இறுகப் பிடித்துப் பார்க்க வேண்டும். இல்லை என்று முரண்டு பிடித்து குறுக்கே இழுத்துச் சென்றால் மாட்டுடன் மல்லுக்கட்டத் தேவையில்லை.

கயிற்றின் கையை விட்டு விட வேண்டியது தான்.

அது போற போக்கில் போய் அடிபட்டு, மிதிபட்டு, கசாப்புக்கடைக்காரனிடம் சிக்கி கடைசியில் அடுத்தவர் பல்லுக்குப் பதமாகும்.

தம்பி மதுவன் மேற்குறித்த விடயம் மனைவியின் பேச்சைக் கேட்காத கணவனுக்கும் பொருந்தும்.

**திகான் — வடமராட்சி**

**இலங்கையின் பொருளாதார அரசியல் நெருக்கீட்டிற்கு தங்களின் தீர்க்க தரிசனமான அறிவுரை என்ன?**

அரசியல் நெருக்கீட்டிற்கு ஒரே தீர்வு. தேர்தல்.

பொருளாதார நெருக்கீடு என்பது குறுகிய காலத்தின் வெளிப்பாடு அல்ல. அது நீண்ட கால இழப்பு இப்போது எம்மை வாட்டுகின்றது.

பயங்கரவாதத்தை அழிப்பதாய் ஆட்சியாளர்கள் போருக்கு கோடி கோடியாய் கொட்டிய பணம் யாருடையது. எங்கிருந்து வந்தது.

இதுவே இலங்கையின் தற்போதைய பொருளாதார வீழ்ச்சிக்குரிய முக்கிய காரணம்.

இதில் கொள்ளையடிப்புக்களும் நடந்தது தான். கடலில் ஒரு செம்பு நீர் எடுத்தால் தெரியவா போகிறது என்பது போல அடிக்க ஏலுமான அளவை அடித்துவிட்டு அதை போருக்கான செலவில் காட்டிவிட்டார்களோ என்னவோ.




**அன்பு வாசகர்களே!**
**உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**
**076 097 3126**
**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**டனுஷாந்ராசா — திருநெல்வேலி**

**ஈரானிய ஜனாதிபதி ரைசியின் இறப்பிற்குப் பின்னால் இன்னொரு நாடு தொடர்பு இருப்பது உறுதியானால் மூன்றாம் உலகப் போர் வெடிக்கும் என்கின்றனரே ஈரானிய ஆட்சிபீடம்?**

குரைக்கிற நாய்கள் கடிக்காது. இப்படியொரு பழமொழியுண்டல்லவா?

குரைக்கிற நாய்கள் கடிக்காது என்றால் கடிக்கிற நாய்கள் குரைக்காது என்ற முடிவுக்கு நாம் வரலாமல்லவா?

இந்த விடயத்தில் ஈரான் குரைப்பதை நிறுத்தி விட்டு கடிப்பது நல்லது.

ஏனென்றால் நீண்டகாலமாய் குரைத்துக் கொண்டே இருந்தால் குரல் அடைத்து விடுமல்லவா?

**மதன் — வவுனியா**

**இலங்கை கிரிக்கெட் அணியின் அடுத்த உல்லாச சுற்றுலா எங்கே?**

அரசியல் புகுத்தப்படாத அணியாக இலங்கை அணி இருக்குமாக இருந்தால் 1996 இலங்கை அணியை விட மிகப் பலம் மிக்க அணியாக இலங்கை அணி மிளிரும்.

என்ன செய்வது அரசியல் தலையீடுகள் விளையாட்டுக்குள் புகுவதை தடுக்கும் வகையில் இல்லாததால் அபாரமான இலங்கை அணியை அனைவரும் கேலி செய்யும் அளவில் நிலை இருக்கிறது.

உலகக் கிண்ணத் தொடரின் பின் இந்தியாவுடன் விளையாடவுள்ளது இலங்கை அணி. நிச்சயம் இதில் மிகச் சிறந்த பெறுபேற்றைப் பெறும் என நம்புவோம்.



இலங்கையின் பொருளாதார அர சியல் நெருக்கீட்டிற்கு தங்களின் தீர்க்க தரிசனமான அறிவுரை என்ன?

**விஜயதரன் — உரும்பிராய்**

**இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரின் இலங்கை வருகையின் தாக்கம் எப்படியானது?**

ஓ.. அதுவா. வளமையாக இலங்கை இராணுவம் சுட்டதில் இந்திய மீனவர் இறப்பு என்பதே செய்தியாக இருந்தது.

இப்போது இந்திய மீனவர் கப்பல் மோதியதில் இலங்கை இராணுவ வீரர் பலி என்பதில் நிற்கிறது.

இது ஒரு பெரும் மாற்றமே.

13 ஆவது திருத்தச் சட்ட மூலம் முழுமையாக அமுல் ஆக வேண்டும் என்கிறது இந்தியா. 13 தமிழீழத்துக்கு ஒப்பானது என்கின்றனர் பேரினவாத சக்திகள்.

இதில் இந்தியாவின் முடிவு எவ்வாறு இருக்கும் என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

**ஈஸ்வரன் — உரும்பிராய்**

**தமிழ் தேசிய ...... என்றால் என்ன? அவர்கள் யார் வியாசரே?**

தமிழினத்திற்காக ஒரு துளி வியர்வையேனும் சிந்தியிருக்க மாட்டார்கள். ஆனால் தமிழருக்காய் 15 லீற்றர் இரத்தம் சிந்தியதாய் கதை அடிப்பார்கள்.

தமிழினம் பட்ட பாட்டை கொஞ்சமும் மனதில் வைத்திருக்க மாட்டார்கள். ஆனால் தமிழினத்தின் வலி நெஞ்சில் நிறைத்திருப்பதாய் பீலா விடுவார்கள்.

தமிழ் தேசியம் என்றால் என்னவென்றே தெரியாது. ஆனால் தமிழ் தேசியத்துக்காய் உயிரையும் கொடுப்போம் என்று புழுகுவார்கள்.

பதவி ஆசை எமக்கில்லை. தமிழ் மக்கள் விடிவு ஆசையே உண்டென்பார். ஆனால் தம் வங்கிக் கணக்கில் கோடி கோடியாய் வைப்புச் செய்து அதை வட்டி செய்து அது குட்டி போடுகிறதா என்று குட்டிக்கரணம் போடுவார்கள்.

**சி.இளங்கோ — மானிப்பாய்**

**ஒஸ்லோ ஒப்பந்தம் உருக்குலைக்கப்பட்ட பின்பும் பண்டிகைகளில் தீர்வென்று ஏமாந்த பின்னரும் எம் மக்கள் பிரதிநிதிகள் நம்பிக்கையாய் கதைக்கின்றனரே?**

இதற்கு நல்லதொரு பழமொழியுண்டு. இவ்விடத்தில் அதைக் கூறுவது அநாகரிகமாக இருக்கும்.

ஆதலால் அதைத் தவிர்த்துக் கொள்வோம்.

பதவி ஆசை என்பது மனிதனுக்கு எப்படி இருக்கும் என்பதை மேற்குறிப்பிடப்பட்ட கேள்விக்குரித்தானவர்களைப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்.

நான் சாகும் வரை பதவியில் இருந்துதான் சாவேன் என்று கதிரையைக் கட்டிப் பிடித்துக் கொண்டிருப்பதால் எந்த நன்மையும் இல்லை என்பதை புரிய வேண்டியவர்கள் புரிந்தால் சரி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறை வணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.

தமிழ் மக்களுக்காக குரல் கொடுத்த டொக்டர் ஜெயகுலராஜா அவர்களின் மறைவு பேரிழப்பாகும்.

தமிழ்ப் பற்றுடன் தமிழ் இனத்திற்குச் சேவையாற்றிய அவரை அகில இலங்கைக் கம்பன் கழகம் மகர யாழ் விருது வழங்கிக் கௌரவித்திருந்தது.

அன்னாரை நம் தமிழினம் என்றும் நினைவு கூரும்.

இதேபோன்று கொக்குவில் இந்துக் கல்லூரியின் புகழ் பூத்த அதிபராக இருந்த பொ.கமலநாதன் அவர்களின் திடீர் மறைவு ஆழ்ந்த துயரத்தை ஏற்படுத்தியுள்ளது.

சமய, சமூகப் பணிகளில் அவர் ஆற்றிய சேவை என்றும் நினைவிற்குரியது.

இதேபோன்று, வேலணை சரஸ்வதி வித்தியாலய அதிபராக இருந்து மாணவர் சமூகத்திற்குச் சேவையாற்றிய ஓய்வுநிலை அதிபர் திருமதி. இந்திராணி சிவதாஸ் அவர்களின் திடீர் மறைவு மிகுந்த துயரத்தைத் தருகிறது.

இவர்களுக்கு இரண்டு நிமிடமௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:-** இனி, தமிழர்கள் இன உரிமைக்காகப் போராடாமல் மத விவகாரங்களோட தான் மல்லுக் கட்டுவினம் போல...



ஜெயகுலராஜா



பொ.கமலநாதன்



திருமதி.இந்திராணி சிவதாஸ்

**கங்காணி:-** உண்மைதான், தமிழ் மக்களை சைவம் - கத்தோலிக்கம் என்ற அடிப்படையில பிரித்து அவர்களுக்கிடையில மோதல்களை ஏற்படுத்திறதில தென்பகுதிப் பேரினவாதம் கனகச்சிதமாகச் செயற்படுகிறது.

சிங்களப் பேரினவாதத்தின்ர இந்த வேலைத்திட்டத்தை தமிழர்கள் மத்தியில அமுல்படுத்துகிறது தான் அவர்களின்ர நோக்கம்.

அதின்ர ஒரு நடவடிக்கை தான், மன்னாரில திருக்கேதீச்சர நுழைவாயில் வளைவு அடித்து நொருக்கப்பட்டு, நந்திக் கொடிகள் சப்பாத்துக் கால்களால் உழக்கப்பட்ட சம்பவம்.

இப்ப அதின்ர தொடர்ச்சியாக யாழ்ப்பாணத்திலும் மதவாத சிந்தனை விதைக்கப்படுகிறது.

ஏதோ எங்கட தமிழ் மக்கள் சமய பேதங்களைக் கடந்து இனப் பற்றுதலோட செயலாற்ற வேணும்.

இல்லையெண்டால் எங்கட தமிழ் இனத்தின்ர ஒற்றுமை சிதைந்து போய்விடும் கவனம்.

இவ்வாறு கங்காணி கூறியதும் ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க மூப்பர் குரல் கொடுத்தார்.

**மூப்பர்:-** எங்கட தமிழர் பிரதேசத்தில இப்ப இலஞ்ச ஊழலும் தலைவிரித்தாடுகிறதைக் காண முடிகிறது.

**சாத்திரியார்:-** இலஞ்சம் மட்டுமல்ல செல்வாக்குக் கலாசாரமும் ஓங்கி நிற்குது.

இது தொடர்பில எங்கட மாகாண, மாவட்ட நிர்வாகங்கள் கவனம் செலுத்த வேணும்.

**சிறப்பர்:-** சொன்னாப் போல யாழ்ப்பாணத்தின்ர முன்னாள் அரச அதிபர் சிவபாலசுந்தரனார் வெள்ளி, ஞாயிற்றுக் கிழமைகளில தரம் ஒன்பதுக்குட்பட்ட மாணவர்கள் ஆலயங்களுக்கும் அறநெறிப் பாடசாலைகளுக்கும் செல்லும் வகையில, தனியார் கல்வி நிறுவனங்கள் அன்றைய தினம் அந்த மாணவர்களுக்கு வகுப்புகளை வைக்காமல் தவிர்க்க வேணும் எண்டு உத்தரவிட்டு அதனை நடைமுறைப்படுத்தினவர்.

ஆனால் இப்ப வெள்ளி, ஞாயிறுதினங்களில தனியார் கல்வி நிறுவனங்கள் வகுப்புகளை நடத்துகிறதாகப் பலரும் குறை சொல்லுகினம்.

ஆகையால, சிவபாலசுந்தரனாரின்ர அந்தத் திட்டத்தைத் தொடர்ந்தும் பின்பற்ற வேணும்.

இது தொடர்பில எங்கட புதிய அரச அதிபர்கள் நடவடிக்கை எடுக்க வேணும் எண்டு ஆலடியில ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவம்.

இவ்வாறு சிறாப்பர் கூறியதும் அத்தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

**பண்டிதர்:-** என்னைப் பொறுத்த வரையில, இன்னொரு தீர்மானத்தை நாங்கள் எடுக்க வேணும்.

**கங்காணி:-** என்ன பண்டிதர் ஐயா சொல்லுறியள்.

**பண்டிதர்:-** இப்ப எங்கட தமிழ்ப் பிரதேசங்களில தெருநாய்களின்ர தொல்லை எல்லை மீறிப் போயிருக்குது.

கடந்த ஒரு சில தினங்களுக்கு முன்னரும் கிளிநொச்சியில ஒரு பாலகி விசர் நாய்க்கடிக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.


இது தவிர, தெருநாய்களால வீதி விபத்தும் கூடிக் கொண்டு வருகுது.

எனவே எங்கட மாவட்ட செயலர்கள் தெருநாய்களைக் கட்டுப்படுத்துகின்ற ஒரு விசேட திட்டத்தைக் கொண்டு வந்து, உள்ளூராட்சித் திணைக்களங்களுடன் சேர்ந்து அதனை நடைமுறைப் படுத்த வேணும்.

அப்படி அதனை நடைமுறைப்படுத்தினால், நாய்த் தொல்லையால ஏற்படுகின்ற மரணங்களையும் அங்கவீனங்களையும் முற்றுமுழுதாகத் தடுக்க முடியும்.

இவ்வாறு பண்டிதர் கூறியதும் தெருநாய்களை முற்றாகக் கட்டுப்படுத்துவதில உள்ளூராட்சி சபைகளுடன் இணைந்து மாவட்ட செயலர்கள் விசேட திட்டமொன்றை வகுக்க வேண்டும் என்ற தீர்மானம் ஆலடியில் நிறைவேறியது.

இவ்வாறு தீர்மானம் நிறைவேறியதும் அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.



## எங்கட தமிழர்கள் இனிமேல் மதத்தால மல்லுக்கட்டுவினம்

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களம் பல கண்ட யாழ் கோட்டை




எங்களுடைய போர் வீரர்களுக்கு அவர்களைக் கலியாணம் செய்து கொடுக்கவுள்ளேன். குடும்பமாக விருந்த அகட்டப்பட்ட போர்வீரர்களை அவர்களின் கோவாவிற்கும், ஏனையோரை பத்தேவியாவிற்கும் அனுப்பி வைக்கிறேன். அவர்களைச் சிறையில் வைப்பதோ, போர்த்துக்கலிற்கு அனுப்புவதோ உங்கள் சித்தத்தைப் பொறுத்தது..." என்றவாறு றைக்ளோப் வன் ஹூன்சின் அறிக்கை அமைந்தது.


யாழ்ப்பாணக் கோட்டைக்குள் ஒல்லாந்தர் குடியேறினர். யுத்தத்தினால் சிதைந்த மாளிகைகள் தற்காலிகமாகத் திருத்தப்பட்டன. ஒல்லாந்தப் படையுடன் நார்டென் கப்பலில் வந்த பாதிரியார் பால்தேயஸ், போர்த்துக்கேயரின் கத்தோலிக்க தேவாலயத்தைப் புரட்டஸ்தாந்துத் தேவாலயமாகச் சமயச் சுத்திகரிப்புச் செய்து முதலாவது நன்றிப் பிரர்த்தனையை நடத்தினார்.

யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்து போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் யாழ்ப்பாணத்தையும் அதனைச் சார்ந்த பகுதிகளையும் தத்தம் ஆட்சிக் காலத்தில் நிர்வாகித்தனர். அதனால் யாழ்ப்பாணக் கோட்டையை யாழ்பாண மக்கள் 'இராச வாசல்' என்றே அழைத்தனர்.

போர்த்துக்கேயர் யாழ்ப்பாணப் பிரதேசத்தை 32 கோயிற்பற்றுக்களாகப் பிரித்தனர். ஒவ்வொரு கிறிஸ்தவ தேவாலயமுள்ள பகுதியும் ஒவ்வொரு கோயிற் பற்றாகக் கருதப்பட்டது. நல்லூர் சுண்டுக்குழி, வண்ணார் பண்ணை, பண்டத்தரிப்பு, வட்டுக்கோட்டை, உடுவில், மல்லாகம், தெல்லிப்பழை, மயிலிட்டி, அச்சுவேலி, புத்தூர், கோப்பாய், உடுப்பிட்டி, கட்டைவேலி, பருத்தித்துறை, நாவற்குழி, சாவகச்சேரி, கச்சாய், வரணி, முள்ளிப்பற்று முதலான 32 கோயிற்பற்றுகளாகப் பிரிக்கப்பட்டிருந்து. இந்த ஒவ்வொரு கோவிற்பற்றுக்கும் ஒவ்வொரு தமிழ்ப்பிரதிநிதி நிர்வாகத்திற்குத் துணை செய்பவராக நியமிக்கப்பட்டிருந்தார். அந்த அந்தக் கோயிற் பற்றில் உயர்குலத்தாலும், செல்வாக்காலும் நாட்டாண்மையாக விளங்கிய ஒருவர் இப்பதவியை வகித்தார். யாழ்ப்பாணக் கோட்டையினுள் இருந்த அடுக்களையில் பெரும் அவியல் நடக்கும், ஒல்லாந்தர் மாட்டிறைச்சி உண்பவர்களாதலால் கோட்டைக்குள் மாடுகளை அறுக்கும் ஓரிடத்தையும் கொண்டிருந்தனர். பசுவதை யாழ்ப்பாண மக்களால் ஒதுக்கப்பட்ட ஆசாரமாதலால், மாட்டிறைச்சியைச் சைவர்கள் அன்று உண்பதில்லை அதனால் இறைச்சிக்கு மாடுகளை விற்க மாட்டார்கள்.

(தொடரும்...)

# கடல் புறா




எந்த நிமிடத்திலும் காட்டுப் பகுதியிலிருந்து பதக்குகள் அம்போ, வேலோ எய்து அவனைக் கொன்றுவிடலாமெனக் கோட்டை வீரர் எச்சரித்தும் அமீர் பயங்கரச் சிரிப்புச் சிரித்து விட்டுத் தன் இஷ்டப்படி மதில் சுவரில் உலாவினான்.

அவன் காட்டிய தைரியம் மற்ற இருபது வீரர்களுக்கு மட்டுமல்ல அந்த நகரவாசிகளுக்கும் பெரும் துணிவை ஊட்டியதால் பூர்வக்குடிகளைச் சமாளிக்கப் பெரும் மகிழ்ச்சிக் கூச்சலுடன் ஏற்பாடுகளை நகர மக்களும் செய்தனர்.

அடுத்த ஒரு வாரம் அந்த மக்களைப் புது மனிதர்களாக அடித்தது. சுயநம்பிக்கை இழந்து பூர்வகுடிகளிடம் நடுங்கிக் கொண்டிருந்தவர்களைச் சுயநம்பிக்கையும் தைரியமும் உள்ளவர்களாக அடித்தது.

நகர மக்கள் எதையும் சமாளிக்கத் துணிவு கொண்டார்கள். கடற்கரைக் கொள்ளையரிடமும் பெரும் மாறுதல் ஏற்பட்டு வந்தது. கோட்டையிலுள்ள சூதாட்ட அரங்கங்களில் பணத்தைப் பறிகொடுத்து வந்த கொள்ளையர் நகர மக்களின் மாறுதலைக் கண்டு மகிழ்ந்தனர்.

கடற் பகுதியில் பூர்வக் குடிகள் எதிர்தால் அவர்களைச் சமாளிக்க முனைந்து தங்கள் மரக்கலங்களையும் தயார் செய்து கொண்டனர். இளையபல்லவன் அக்ஷய முனையில் நுழைந்த நாளில் இருந்து சுற்றிலும் நின்ற கொள்ளையர் போர்க் கப்பல்களில் போர்க்கலங்கள் பழுது பார்க்கப்பட்டன. தீ அம்புகளை வீசும் விற்களின் திறனும் சோதிக்கப்பட்டது. பாய்களின் கிழிசல்கள் தைக்கப்பட்டன. பாய்களை இழுக்க புதுக் கயிறுகளும் கட்டப்பட்டன. தவிர, கரையில் இருக்கப்பட்ட இளையபல்லவன் மரக்கலத்தைப் பழுது பார்ப்பதில் தீவிரமாக முனைந்து கோட்டையிலிருந்து வந்த மரக்கல அமைப்பாளருக்குப் பேருதவி புரிந்தனர்.

இளையபல்லவன் மரக்கலத்தைப் பழுது பார்க்கப் பகிட்பாரிஸான் காட்டுப் பகுதியிலிருந்து பெரும் மரங்கள் வெட்டப்பட்டுக் கடற்கரைக்குக் கொண்டுவரப்பட்டன. தச்சர்கள் அவற்றிலிருந்து பலகைகளும் புட்களும் தயாரித்தனர். கொல்லர்கள் இரும்புச் சலாகைகளை வடித்து அடித்தனர். நகரத்தின் உட்புறத்தைப் போலவே வெளிப்புறத்தில் இருந்த கடற்கரையிலும் பெரும் உலைகள் தீ நாக்குகளைக் காட்டின. சுத்தியல்களும் உளிகளும் பதித்தன.

## பாதுகாப்பு ஏற்பாடுகள்

இத்தனையும் திருப்தியுடன் பார்த்துக்கொண்டிருந்த இளையபல்லவனின் மனத்தில் ஒரு பெரும் சந்தேகம் மட்டும் குடிகொண்டிருந்தது. ஒரு வாரத்துக்கு முன்பே எச்சரித்துப் போன வில்வலனோ அவனைச் சேர்ந்த பூர்வகுடிகளோ அந்த ஒரு வாரமும் நகர எல்லைக்குள் ஏன் தலைகாட்டவில்லையென்பது அவனுகுப் புரிய வில்லை. பகிட்பாரிஸான் காட்டுப் பகுதி பெரும் அமைதியாய் இருந் தும் பெரும் புதிராயிருந்தது.

சிறிது தவறு நேர்ந்தாலும் ஊரில் புகுந்து, கொள்ளையும் கொலையும் விளைவிக்கும் தன்மையுடைய பூர்வக்குடிகள் கடற்கரைப் பகுதியில் கொலை விழுந்து ஒரு வாரமாகியும் ஏன் எந்த நடவடிக்கையிலும் இறங்கவில்லையென்பதும் தெரியாமல் தவித்தான் படைத்தலைவன். அவர்கள் சாந்தத்துக்குக் காரணம் தனது பாதுகாப்பு ஏற்பாடுகளாகயிருக்க முடியாதென்பது அவனுக்கு நன்றாகத் தெரிந்திருந்தது. அவர்கள் மௌனத்துக்கும் சாந்தத்துக்கும் என்ன காரணம்?" என்று யோசித்துக் கொண்டேயிருக்கையில் திடீரென ஒரு யோசனை உதயமாகவே. ஆம், ஆம்! அப்படியிருந்தால்? என்று நினைத்துச் சரேலெனத் தனது ஆசனத்திலிருந்து எழுந்தான். அப்பொழுது இரவு ஏறியிருந்து. அறையை விட்டுத் தாழ்வரைக்கு வந்து ஆகாயத்தைப் பார்த்தான் இளையபல்லவன். பூச நட்சத்திரம் பெரும் கொத்தாக மேற்கே சாயத் தொடங்கியிருந்தது. நள்ளிரவு அது என்பதைப் புரிந்துகொண்டான். அதே சமயத்தில் ஆந்தைகள் இரண்டு பெரிதாக அலறின. (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இழப்பு

அறுபது வினாடிகளை இழந்த பின் தானே
நிமிசம் ஒன்றை அது பிரசவிக்க முடிகிறது
நிமிசங்கள் அறுபது அழிந்த பின் அங்கு
அழகான மணித்தியாலம் உருவாகிறது
இரண்டு டசின் மணித்தியாலம்
பிரண்டு கிடந்த பின்னே
நல்ல நாள் ஒன்று மலர்ந்து வருகிறது
முப்பது நாள் முடிவுற்றதாலேயே
முழு மாதம் ஒன்று மலர்கிறது
மாதங்கள் பன்னிரெண்டு
மண்டியிட்டு பணிந்த பின்னே
வருடமொன்று அங்கு
வான் உயர்ந்து நிற்கிறது
இழப்புக்களைச் சேர்த்து
படிக்கற்களாக்கி ஏறி வா!
வான் உயர்ந்த வருடம் போலே
வையத்தில் வாழ்ந்திடலாம்.

**துணவியூர் நடா.**

# மகுடம் சூட்டு இன்று!



போதை எனும் அரக்கன்
போரை விடவும் கொடியோன்
பாதை மாற வைத்து
பண்பு அதனைச் சிதைப்பான்!

அழிக்கும் எண்ணம் தூண்ட
“அதிரி னலின்” மிகையாய்
துளிர்க்கும் உன்னில் ஊட்டி
துட்டன் ஆக்கு வானே!

சந்தோசம் தருவதாக
சதியாய் ஏய்த்து உன்னை
நிந்தை செய்ய “டோப்போமின்”
நிறைய சுரந்து கொள்வான்!

நரம்பால் ஆன மூளையில்
நாச காரம் புரிந்து
வரம்பை மீறி அடிமை
வசமாய் உன்னை கொல்வான்!

ஊறு வழியில் செல்ல
உந்தன் உருவைக் குலைத்து
தாறு மாறாய் பண்பில்
தகராறு பலதும் செய்வான்!

சுயமே இழந்த சடமாய்
சுத்தம் மறந்த விலங்காய்
நயமே தொலைத்த மனதாய்
நாளும் அரிப்பான் உனையே!


ஆளுமைப் பண்புகள் சிதைத்து
அழகிய சமூகம் தொலைத்து
வாழ்க்கை திறன்கள் எரித்து
வதைத்தே மனிதம் சிதைப்பான்!

போதை வெறியில் உழலும்
வாதை மனித நட்பை
பாதை ஓரம் தானும்
பகிர வேண்டாம் நகர்வாய்!

மனதைப் போதையின் பக்கம்
மறந்தும் வைத்து விடாது
வனப்பாம் உந்தன் வாழ்வை
வகையாய் காக்க நிமிர்வாய்!

*சூரிய நிலா*
*உசன், மிருசுவில்.*

## மௌனத்தின் தேடல்- 722



### ஒப்பந்தம்

கொண்ணிலை பேணாது
மெய்நிலை இல்லாமல்
எந்நிலைக்காக இருவர்
இந்நிலையில்
சண்டையிடுகின்றனர்
வன்முறை எதுவும் வேண்டாம்-
உள்ளங்களே!

***ஜெனிக்கிளாஸ் ஜெறிஸ்***

### பெண்ணே துணிந்து நில்

மொழி-இனம்-மதம்-நாடு
வேறுபடலாம் பெண்மை மாறுபடாது
காரியாலயம் என்றாலும் பொது
இடங்கள் என்றாலும் தன்னைக்
காக்கும் பெண்கள் புதுமைப் பெண்கள்
புரட்சிப் பெண்கள் ஆவேசம் கொண்டவள்
ஆண்மகனைத் தாக்கமுனைவாள்-
பெண் இனமே துணிந்து நில்!

**அபி குலமாலிகா,**
**சித்தன்கேணி.**

### நீதியும் நியதியும் சரி(யும்) நிகர்

ஆதியில் அர்த்த சிவனார்
சிவமின்றிச் சக்தியில்லை
சக்தியின்றிச் சிவமில்லையென்று
புரிந்துணவர்வைப் புனிதமாக்கினார்
இன்று மக்கள் தொகை விகிதத்திலும்
பெண்கள் கல்வி வேலை வாய்ப்பிலும்
இவர்கள் எகிறிச் செல்வதால்
சரி நிகர் பேசு பொருளானாலும்
உண்மை அன்பைக்
கொடுத்துப் பதில்
தென்பைப் பெறுவதே நன்மை தரும்
எண்ணங்களுக்கும் வலுவூட்டும்


**க.நாகராசா, நுணாவில்.**

### நவீனம்

நவீனம் நரகத்தின் எல்லை
நவீனம் அழிவின் திறவுகோல்
நவீனம் அவமானத்தின் வடிவம்
நவீனம் அரியண்டத்தின் தொடக்கம்
நவீனம் நன்மதிப்பின் எதிர்மறை
நவீனம் இப்பூமியின் பிரளயம்
நவீனம் மனித குலத்தின் நாசகாரம்
இவை அனைத்திற்கும்
இப்படம் ஒன்றே உதாரணம்

ராம்குமார், மந்துவில் மேற்கு.

## மௌனத்தின் தேடல்- 723



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல், வலம்புரி- சங்குநாதம்,
இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

ஏனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

### இயற்கையின் நியதி

இன்பத்தில் துன்பத்தில் இணைந்திடும் உறவுகள்
சண்டையிட்டால் சரி எது பிழை எதுவென்று
தெரிந்திடாது... புரிந்திடாது... விட்டுக்கொடுப்பதே வாழ்க்கை
ஆணில் பெண் பாதி பெண்ணில் ஆண் பாதி
இதுவே இறைவன் படைப்பு இதுவே இயற்கை நியதி

**தர்மலன் பாபு, இணுவில்.**

### போலிப் பகட்டு

உடுப்பு நடப்பு பகட்டு பசப்புக் கதைகளென
பாக்க கேட்க பரவசம் பொங்கும்
பசப்புக் கதைகள் கசப்பாய் மாறிட போட்ட
வேடமும் கலைந்து போக இடம் பொருள் ஏவல்
தெரியா நிலையில் நுள்ளுப் பிராண்டு கிள்ளுப் பிராண்டென
அவர் தம் இயற்கைக் குணம் தான் வெளி வந்திடுமே

**சி.மகாலட்சுமி, கொக்குவில்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

**திரைப்படம்: அவன் தான் மனிதன்**
**இயற்றியவர்: கவிஞர் கண்ணதாசன்**
**இசை: எம்.எஸ். விஸ்வநாதன்**
**பாடியவர்: டி.எம். சௌந்தரராஜன்**



மனிதன் நினைப்பதுண்டு வாழ்வு நிலைக்குமென்று
இறைவன் நினைப்பதுண்டு பாவம் மனிதனென்று
மனிதன் நினைப்பதுண்டு வாழ்வு நிலைக்குமென்று

மனிதன் நினைப்பதுண்டு வாழ்வு நிலைக்குமென்று
இறைவன் நினைப்பதுண்டு பாவம் மனிதனென்று
இறைவன் நினைப்பதுண்டு பாவம் மனிதனென்று
மனிதன் நினைப்பதுண்டு வாழ்வு நிலைக்குமென்று

தந்தை தவறு செய்தார் தாயும் இடம் கொடுத்தாள்
தந்தை தவறு செய்தார் தாயும் இடம் கொடுத்தாள்
வந்து பிறந்து விட்டோம் வெறும் பந்தம்
வளர்த்து விட்டோம்
மனது துடிக்கின்றது மயக்கம் வருகின்றது
அழுது லாபம் என்ன அவன் ஆட்சி நடக்கின்றது

மனிதன் நினைப்பதுண்டு வாழ்வு நிலைக்குமென்று
இறைவன் நினைப்பதுண்டு பாவம் மனிதனென்று

காட்டு மனமிருந்தால் கவலை வளர்ந்து விடும்
காட்டு மனமிருந்தால் கவலை வளர்ந்து விடும்
கூட்டைத் திறந்து விட்டால் அந்தக் குருவி
பறந்து விடும்
காலில் விலங்கு விட்டோம் கடமை
என அழைத்தோம்
நாலு விலங்குகளில் தினம் நாட்டியம் ஆடுகின்றோம்

மனிதன் நினைப்பதுண்டு வாழ்வு நிலைக்குமென்று
இறைவன் நினைப்பதுண்டு பாவம் மனிதனென்று

விதியின் ரதங்களிலே நாம் விரைந்து
பயணம் செய்தால்
மதியும் மயங்குதடா சிறு மனமும் கலங்குதடா
கொடுக்க எதுவுமில்லை என் குழப்பம் முடிந்ததடா
கணக்கை முடித்து விட்டேன் ஒரு
கவலை முடிந்ததடா

மனிதன் நினைப்பதுண்டு வாழ்வு நிலைக்குமென்று
இறைவன் நினைப்பதுண்டு பாவம் மனிதனென்று

# உலகக்கோப்பையின் உன்னத ஸ்டார்கள்

அமெரிக்காவிலும் வெஸ்ட் இண்டீஸிலும் நடந்திருக்கும் உலகக்கோப்பை இதுவரை நடந்த உலகக்கோப்பைத் தொடர்களிலேயே சுவாரஸ்யமானது எனும் பெருமையைப் பெற்றிருக்கிறது. ரசிகர்களின் பொறுமையைச் சோதிக்கும், ஒரு பக்கமாகச் செல்லும் ஆட்டங்கள் இந்த உலகக்கோப்பையில் ரொம்பவே குறைவு. எல்லா அணிகளுமே கடைசி வரை முட்டி மோதின.இப்படி ஒரு கடினமான தொடரில் சிறப்பாக ஆடியிருக்கும் சில வீரர்களைப் பற்றி இங்கே...

### பும்ரா




வெறும் எண்களின் அடிப்படையில் மட்டுமல்லாமல் ஏற்படுத்தியிருக்கும் தாக்கத்தின் அடிப்படையிலும் கணக்கிட்டு யோசித்தால் நடப்பு உலகக்கோப்பையின் தொடர் நாயகன் விருதை பும்ராவுக்கே வழங்க வேண்டியிருக்கும். இந்திய பௌலிங் படையை சிங்கம் போல முன்னின்று வழிநடத்திக்கொண்டிருக்கிறார். 'நிறைய முயலாமல் ஏற்கெனவே தான் கற்று வைத்திருக்கும் யுக்திகளை மட்டுமே சரியாகச் செயற்படுத்த வேண்டும் என்பதுதான் என் திட்டம்' என்கிறார் பும்ரா. மூன்று பார்மட்களிலும் அதே அபாயத்தன்மையோடு கோலோச்சும் வேகப்பந்து வீச்சாளர் இந்தியாவில் ரொம்பவே அரிது. சச்சின், டோனி, கோலி என நீளும் சூப்பர் ஸ்டார் வீரர்களின் பட்டியலில் பும்ராவையும் சேர்த்து வைத்துக் கொண்டாட வேண்டும்.

### பசல் ஹக் பரூக்கி




நடப்பு ரி-20 உலகக்கோப்பையில் 15 விக்கெட்டுகளுக்கு மேல் வீழ்த்தியிருக்கிறார். பெரும்பாலான விக்கெட்டுகள் பவர்ப்ளேயில் வந்தவை. இடதுகை வேகப்பந்து வீச்சாளர்களான அவுஸ்திரேலியாவின் ஸ்டார்க்கும் நியூசிலாந்தின் ட்ரெண்ட் போல்ட்டும் இன்னிங்ஸின் முதல் ஓவரை வீசுகிறார்கள் எனில் அதன்மீது ஒரு எதிர்பார்ப்பு உண்டாகும். அப்படி ஒரு எதிர்பார்ப்பை தன் பந்துவீச்சுக்கும் தன் தொடர்ச்சியான சிறந்த செயற்பாட்டின் வழி ஏற்படுத்திக்கொண்டார் பரூக்கி.

### ரிஷப் பண்ட்



ஒரு கொடிய சாலை விபத்திலிருந்து மீண்டு வந்து சிறந்த செயற்பாட்டைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார் ரிஷப் பண்ட். கிட்டத்தட்ட ஒரு ஆண்டு சிகிச்சைக்கும் ஓய்வுக்கும் பிறகு பண்ட் மீண்டும் ஐ.பி.எல் மூலம் செகண்ட் இன்னிங்ஸைத் தொடங்கினார். ஐ.பி.எல்- இலேயே தன் வழக்கமான அதிரடி ஆட்டத்தை மீண்டும் வெளிக்காட்டினார். தற்போது உலகக்கோப்பையிலும் அபாரமாக ஆடி வருகிறார் ரிஷப் பண்ட்

### ரஹ்மானுல்லா குர்பாஸ் ரூ இப்ராஹிம் ஷத்ரான்

100 ரன்கள் ஓப்பனிங் பார்ட்னர்ஷிப் என்பது நடப்பு உலகக்கோப்பையில் பெரிய அணிகளுக்கே அரிதாகத்தான் நடந்திருக்கிறது. ஆனால், ஆப்கானிஸ்தானின் இந்த ஓப்பனிங் இணை 3 போட்டிகளில் 100 ரன்கள் பார்ட்னர்ஷிப்பைக் கடந்திருக்கிறது. ஆப்கானிஸ்தான் இந்த உலகக்கோப்பையில் ஆச்சர்யத்தை நிகழ்த்தியது. சிக்சர்களின் மீது மட்டும் கவனம் குவிக்காமல் நிறைய ரன்களை ஓடி ஓடி எடுத்தனர். ஆப்கானிஸ்தான் நிகழ்த்திய ஆச்சர்யங்களுக்கெல்லாம் ஆரம்பப்புள்ளியாக இவர்கள்தான் இருந்தனர்.

### ரபாடா




தென்னாபிரிக்கா அணி ஆடிய எல்லாப் போட்டிகளையும் நெருங்கி வந்து கடைசியில் த்ரில் கூட்டியே வென்றது. அந்த வெற்றிக்கெல்லாம் முக்கிய காரணமாக இருந்தவர் ரபாடா. கடைசி 3 ஓவர்களில் இவர் வீசும் [illegible] இருக்கும்.. இதேமாதிரியாக அநேகமாக எல்லாப் போட்டிகளிலுமே ரபாடா மிரட்டியிருக்கிறார். தென்னாபிரிக்காவின் வெற்றியில் ரபாடாவின் பங்களிப்பு அதிகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

406

வலம்புரியின் மருத்துவச்சுடர்

## தெரிந்தே நடக்கும் தவறுகள்...

ஆரோக்கியமாக வாழ்வது எப்படி என்று எல்லோருக்கும் தெரியும். செயற்கையான உணவுகளை விடுத்து, இயற்கையான ஆரோக்கியமான உணவுகளை உட்கொள்ளல், தவறாமல் உடற்பயிற்சி செய்தல், உடல் நிறையை சரியான விதத்தில் பேணுதல், புகைத்தல், குடி பழக்கம் என்பவற்றை தவிர்த்தல் மற்றும் உள ஆரோக்கியத்தைப் பேணுதல் போன்ற நடவடிக்கைகள் ஆரோக்கியமான வாழ்விற்கு வழிவகுக்கும் என எமக்கு நன்றாக தெரியும்.

இவற்றை அறிந்திருந்தும், நம்மிடையே வாழும் மக்களில் நான்கில் ஒரு பங்கினருக்கு நீரிழிவு அல்லது நீரிழிவிற்கு முற்பட்ட நிலை ஏற்பட்டுள்ளது எப்படி என்பது பற்றி நாம் சிந்திக்க வேண்டும். அத்துடன், ஆரோக்கியமான வாழ்க்கை முறை பற்றி தெரிந்திருந்தும், வளர்ந்தவர்களில் மூன்றில் ஒரு பங்கினருக்கு உயர் குருதி அமுக்கம் மற்றும் 58% மக்களுக்கு உடல் நிறை அதிகரிப்பு எவ்வாறு ஏற்பட்டது என்பது பற்றியும் நாம் சிந்திக்க வேண்டும். இவற்றை கவனிக்காமல் விடுவதால் மாரடைப்பு, புற்றுநோய் போன்ற பல நோய்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

ஆரோக்கியமான வழிமுறைகள் பற்றி அறிந்திருந்தும், இவ்வாறு நோய்கள் ஏற்பட என்ன காரணம் என்று பார்த்தால், எமக்கு இருக்கும் அறிவை சரியான விதத்தில் நடைமுறைப்படுத்தாமையே ஆகும்.

அவ்வாறான ஆரோக்கியமான வாழ்க்கை நடைமுறைகளுக்கு நாம் முக்கியத்துவம் கொடுக்காமல் நடந்து கொள்வதே இவற்றிற்கு காரணம் ஆகும். உதாரணமாக, ஆரோக்கியமான உணவு வகைகள் பற்றி தெரிந்திருந்தும், உடனடி உணவுகள் மற்றும் மென்பானங்களை தான் நாம் கொள்வனவு செய்கிறோம். உடற்பயிற்சி செய்ய பின் வாங்குகிறோம், மற்ற விடயங்கள் பற்றி தெரிந்து வைத்திருக்க ஆர்வம் காட்டும் நாம் எமது நிறை அளவை பற்றி அறிய தவறுகிறோம் , ஆபத்தானது என தெரிந்திருந்தும் புகை, குடி பழக்கத்திற்கு அடிமையாகி போகிறோம் , சீனி சேர்த்த உணவுகள் ஆபத்தானது என தெரிந்திருந்தும் எமக்கும் வீட்டிற்கு வரும் விருந்தினருக்கும் சீனி சேர்த்து தேநீர் கொடுப்பதை தான் வழக்கமாக வைத்திருக்கிறோம் அத்துடன் மனதை மகிழ்வாக வைத்திருப்பதை விடுத்து பிரச்சினையான விடயங்களிலே கவனம் செலுத்துகிறோம். எதனால் இவ்வாறு செய்கிறோம் என நாம் சற்று சிந்திக்க வேண்டும். போதைப்பொருள் பாவனையால் நீரிழிவு ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் அதிகரிக்கிறது. அதோடு, நோய்கள் உள்ளவர்களை அவற்றைப் பாவிப்பவதால் அந்த நோயின் சிக்கல் தன்மை அதிகரிக்கிறது.

எனவே, நாம் பெற்ற அறிவை எப்படி நடைமுறைப்படுத்துவது என நாம் பார்க்க வேண்டும். சிறிய சிறிய மாற்றங்கள் கூட எமது ஆரோக்கியமான வாழ்க்கைக்கு வழி வகுக்கும். இவற்றில் நாம் கவனம் செலுத்தி ஆரோக்கியமாக வாழ்வதுடன் மற்றவர்களையும் ஆரோக்கியமான வாழ்க்கை முறையைப் பின்பற்ற ஊக்கப்படுத்த வேண்டும்.

எமக்கு இருக்கும் போதுமான அறிவை சரியான முறையில் நடைமுறைப் படுத்தி, மற்றவர்களையும் ஊக்கப்படுத்தி, பல தொற்றா நோய்களில் இருந்து எம்மை பாதுகாத்து ஆரோக்கியமாக வாழ்வோம்.

**Dr. சி. சிவன்சுதன்**
**பொது வைத்திய நிபுணர்**
**போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**

## தைரொய்ட் நோய்கள்...

உடலில் தைரொக்சின் எனும் சுரப்பு அதிகமாக சுரக்கும் நிலைமை Hyperthyroidism எனப்படும் குறைவாக சுரக்கும் நிலைமை, hypothyroidism எனப்படும். இவ்வாறு தைரொக்சின் குறைவாக சுரக்கும் நிலைமை உள்ளவர்களில் அதிகரித்த உடற்பருமன், அதிகரித்த நித்திரை தன்மை , சோம்பல் தன்மை, குளிரைத் தாங்க முடியாத நிலை, அதிகரித்த மாதவிடாய் போக்கு போன்ற பிரச்சினைகள் காணப்படும்.



தைரொக்சின் சுரப்பு அதிகமாக சுரக்கும் போது, இவற்றிற்கு எதிரான விளைவுகள் ஏற்படும். அதாவது, அவர்களது உடற்பருமன் குறைவடைதல், வெப்பத்தை தாங்க முடியாத நிலை காணப்படல், மாதவிடாயின் போது குறைந்தளவான குருதிப் பெருக்கு வெளியேறல் போன்ற பிரச்சனைகள் காணப்படும். அத்துடன், இவர்கள் எப்போதும் படபடப்பாக இருப்பார்கள், அவர்களது கைகள் எப்போதும் நடுங்கிக் கொண்டிருக்கும். அவர்கள் தங்களுடைய இதயம் படபடப்பதாக கூறுவார்கள், அதிகம் வியர்க்கிறதென்று கூறுவார்கள்.

இவ்வாறான அறிகுறிகள் காணப்படும். ஒரு சிலருக்கு, அவர்களது கண்கள் வெளியே தள் ளிக்கொண்டு காணப்படும் அதோடு கண்கள் சிவப்பு நிறத்தில் காணப் படும். இவ்வாறு பல பிரச்சினைகள் காணப்படும். ஆகவே, தைரொக்சின் சுரப்பு அதிகமாக சுரக்கப்படும் நிலைமையும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒரு முக்கியமான விடயம் ஆகும். இவ்வாறான அறிகுறிகள் காணப்பட்டால், வைத்திய ஆலோசனைப்படி தைரொக்சின் பரிசோதனை செய்வது மிகவும் அவசியமாகும். மிகவும் அதிகரித்த தைரொக்சின் சுரப்பு நிலை, அதாவது Thyrotoxicosis அல்லது Hyperthyroidism எனப்படும் நிலைமைக்கும் வைத்திய ஆலோசனைப்படி மருந்துகளை எடுக்க வேண்டியது அவசியம். இதற்காக, பொதுவாக வைத்தியர்கள் Carbimazole எனும் மருந்தினை வழங்குவார்கள்.

இந்த மருந்தின் அளவானது, நோயாளியின் உடல் நிலைக்கேற்ப, உடல் நிறைக்கேற்ப மற்றும் அவர்களது இரத்த பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் வைத்தியர்களால் தீர்மானிக்கப்படும்.

தைரொக்சின் குறைவாக சுரக்கப்படும் நிலைமைக்கு. அநேகமாக வாழ்க்கை முழுவதும் மருந்து எடுக்க வேண்டி இருக்கும். தைரொக்சின் சுரப்பு அதிகமாக சுரக்கப்படும் நிலைமைக்கு அநேகமாக, இரண்டு வருடங்களுக்கு சிகிச்சையினை வழங்குவதன் மூலம், இந்த பிரச்சினையை தீர்த்துக்கொள்ள கூடியதாக இருக்கும். ஆனால் சிலருக்கு தைரொய்ட் சுரப்பியில் கட்டிகள் காணப்படும். இதற்கு வைத்திய ஆலோசனைப்படி சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண்டும்.

சிலருக்கு தைரொய்ட் சுரப்பியில் கட்டிகள் இல்லாமல் இருக்கலாம். இவர்களுக்கு இரண்டு வருடங்களுக்கு மேலாக மருந்துகளை எடுக்க வேண்டி இருக்கும். இதற்கு வேறு விதமான சிகிச்சை முறைகளும் காணப்படுகின்றன. அவற்றில் குறிப்பாக, கதிர்வீச்சு சிகிச்சை (Radio Iodine Treatment) முக்கியமான ஒரு சிகிச்சை முறையாகும். இது தொடர்பாகவும் எமது மக்கள் மத்தியில் விழிப்புணர்வு காணப்பட வேண்டியது அவசியமாகும்.

இந்த தைரொக்சின் சுரப்பு அதிகமாக சுரக்கப்படும் போது, கர்ப்பம் தரிக்க விரும்பும் பெண்களிற்கோ அல்லது கர்ப்பம் தரித்த முதல் காலப் பகுதியிலோ, நாம் இந்த Carbimazole மருந்தினை வழங்க முடியாது. இதற்கான விசேடமான மருந்தாக Propyl thiouracil எனும் மருந்து காணப்படுகின்றது. உங்களில் யாருக்காவது இந்த தைரொக்சின் சம்பந்தமான பிரச்சினைகள் இருக்கலாம் அல்லது இது சம்பந்தமான சந்தேகங்கள் இருக்கலாம். இதற்காக நீங்கள் உங்கள் அருகில் இருக்கும் எந்த ஒரு வைத்தியரையும் நாட முடியும். இது தொடர்பான மேலதிக விளக்கங்களிற்கு, யாழ் போதனா வைத்தியசாலை, நீரிழிவு மற்றும் அகஞ்சுரக்கும் தொகுதி சிறப்பு நிலையத்தை நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.


Dr.M. அரவிந்தன்,
அகஞ்சுரக்கும் தொகுதி சிறப்பு மருத்துவ நிபுணர்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரமபிதா காட்டிய பாதை

"உணர்ச்சிகளுக்கு அடிமையாகி விடாமல் நம்பிக்கையுடன் வாழ்வோம்".



பைபிளில் மாற்கு எழுதிய:5:21-43 என்னும் பகுதி இன்று எமக்குத் தரப்படுகின்றது. இது கைகள் .தொடுவதனால் ஏற்படும் மாற்றத்தை காட்டுகின்றது. கவலையோடு இருக்கும் மனிதன், அருகில் இருப்போரின் அன்பின் அரவணைப்பில் தன் கவலையை மறந்து புது வலிமை பெறுகின்றான். புகழ்பெற்ற மைக்கிள் ஆஞ்சலோ, இறைவனின் படைப்பை வரையும் போது, இறைவனின் வல்லமை உள்ள கை, மனிதனைத் தொடுவதாக வரைந்துள்ளார்.

கைகள் தொடுவதால் இருவேறு நிகழ்ச்சிகளில் வல்லமை கைமாறுவதை இறைவார்த்தை இன்று காண்பிக்கிறது. "பன்னிரு ஆண்டுகளாய் இரத்தப் போக்கினால் வருந்திய ஒரு பெண் இயேசுவின் மேலுடையின் ஓரத்தைத் தொட்டார்." இயேசுவின் ஆற்றல் கைமாறியதால் அவள் குணமடைந்தாள். இயேசு சிறுமியின் கையைத் தொட்டார். இங்கும் இயேசுவின் ஆற்றல் கைமாறியதால், இறந்த குழந்தை மீண்டும் உயிர் பெற்றது.

தொடுவது நலம் தரும் அனுபவம் என்பதை நாம் உணர்ந்திருக்கிறோம். நமது தொடுதல் பிறரை நலமடைய வைப்பதாக இருக்க வேண்டுமே தவிர, பிறரைத் துன்புறுத்துவதற்காக, இழிவு செய்வதற்காக அமையக் கூடாது. அவை மனித மாண்பைக் குறைப்பனவாகவும் விளங்கக் கூடது. பிறரைத் தொடும் ஒவ்வொரு நிகழ்வும் ஒரு பரிமாற்றமே. அன்பையும் ஆற்றலையும் வாழ்வையும் பகிர்ந்து கொள்ளும் இறை அனுபவம் அது. இத்தகைய புனித பரிமாற்றம் நாம்கடவுளைத்தொடும் போதும், கடவுள் நம்மைத் தொடும் போதும் நடைபெறுகிறது. நற்கருணை வாங்கும் போது மிகச் சிறப்பாக இப்புனித பரிமாற்றம் அரங்கேறுகிறது. ஒவ்வொரு முறையும் பிறரைத் தொடும்போதும், வாழ்வளிக்கும் இப்புனித பரிமாற்றத்தை நாம் செயற்படுத்துகிறோம். இறைவார்த்தையில் புதுப்பிக்கப்பட்டு புது வாழ்வு வாழ்வோம்.

நாம் இன்றைய பைபிள் பகுதியை உன்னிப்பாக நோக்கினால் அவை உணர்ச்சிகளின் குவியலாக இருக்கிறன. **துயரம்:** தொழுகைக்கூடத் தலைவரான யாயிரின் மகள் சாகும் தறுவாயில் இருந்ததால், அவர் இயேசுவை நாடி வருகிறார். எவ்வளவு நெருக்கடியான மனநிலையில் இருந்தார் என்றால், இயேசுவின் காலிலேயே விழுந்து விட்டார். அச்சமும், **அவநம்பிக்கையும்:** யாயிரின் மகள் இறந்துவிட்ட செய்தியைக் கொண்டு வந்த ஆட்கள் "போதகரை இன்னும் ஏன் தொந்தரவு செய்கிறீர்?" என்று சொல்லி, அவருடைய நம்பிக்கையையும், மனவலிமையை யும் குலைக்கிறார்கள். **ஊக்கம்:** இயேசுவோ "அஞ் சாதீர், நம்பிக்கையை மட்டும் விடாதீர்" என்று சொல்லி அவருக்கு ஊக்க மூட்டி, உடன் செல்கிறார். **அழுகை, துயரம்:** இறந்த வீட்டில் ஒப்பாரியும், ஓலமும், புலம்பலும் நிலவு கின்றன. **துணிவான நம்பிக்கை:** "சிறுமி இறக்கவில்லை, உறங்குகிறாள்" என்னும் இயேசுவின துணிச்சலும், நம்பிக்கையும் நிறைந்த சொற்கள். **நகைப்பு:** மக்களின் நம்பிக்கை இல்லாத நகைப்பு. **வியப்பும், மலைப்பும்:** இயேசு சிறுமியை உயிர்ப் பித்தபோது, அங்கிருந்தோர் யாவரும் "மலைத்துப் போய் மெய் மறந்து நின்றார்கள்." இத்தனை உணர்வுகளுக்கும் மையகமாக விளங்குவது இயேசுவின் நம்பிக்கையும், இயேசு மீது யாயிர், பெண்மணி கொண் டிருந்த நம்பிக்யையும். எனவே தான், இயேசு, "அஞ்சாதீர், நம்பிக்கையை மட்டும் விடாதீர்" என அறிவுறுத்துகிறார்.

அச்சம், அவநம்பிக்கை, அழுகை, அமளி, துயரம், கலக்கம், ஓலம், புலம்பல், வியப்பு, மலைப்பு, நகைப்பு அங்கே இருக்கின்றன. இத்தனையும் இறைநம்பிக்கையின் எதிரிகள். இவை இருக்கும் இடத்தில் நம்பிக்கை இருக்காது, நமது வாழ்க்கையில் எவ்வளவு கொந்தளிப்புகள் வந்தாலும், உணர்ச்சிகளுக்கு அடிமையாகிவிடாமல், நம்பிக்கையுடன் வாழ்வோம்.

**ம.பிரான்சிஸ்க் -**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்**

# இன்று ஒரு தகவல் 168



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## கர்வம் நீங்கிய கதை

என்னை விட்டால் வேறு யாரும் இந்தக் காரியத்தை செய்து விட முடியாது. அப்படி என்று சொல்லிக் **காலரை** தூக்கி விட்டுக் கொள்கின்றவர்கள் நிறையப் பேர் உண்டு இந்த உலகத்திலே. கர்வம் என்பது எப்படியோ வந்து எமது தலைக்குள் போய் உட்கார்கின்றது.

அதைக் கீழே இறக்கி வைப்பது மிகவும் கடினமாக இருக்கின்றது. ஆஞ்சநேயரையே இந்த கர்வம் விட்டு வைக்கவில்லையாம். ஆனந்த இராமாயணம் சொல்லுகின்றுது.

அவர் சீதையைத் தேடிக் கண்டுபிடிப்பதற்காக போனார் அல்லவா அசோக வனத்திலே சீதையை பார்த்து விட்டு திரும்பி வந்து கொண்டிருந்தார். அந்த சமயத்திலேயே வந்தது அந்தக் கர்வம். தான் செய்கின்ற செயலை எல்லாம் நினைத்துப் பார்த்தார்.

அடடா! எவ்வளவு காரியம் எல்லாம் நான் செய்து கொண்டிருக்கிறேன் சமுத்திரத்தையே நான் தாண்டினேன். சீதாப் பிராட்டியைத் தேடிக் கண்டுபிடித்தேன். இராவணனையே கண்டு பேசினேன். அங்கே நெருப்பு வைத்து அரக்கர்கள் எல்லாம் தன்னைப்பற்றி பெருமையாக நினைத்தார் ஆஞ்சநேயர். உடனே அவரின் உள்ளத்திலே கர்வம் தோன்ற ஆரம்பித்து விட்டது. இதைப் பகவான் புரிந்து கொண்டார்.

ஆனால் ஆஞ்சநேயர் மிகவும் பெருமையாக சிரித்துக்கொண்டே பலத்த கர்ஜனையோடு வந்து கொண்டிருந்தார். வழியிலே திடீரென்று அவருக்கு தாகம் எடுத்தது. உடனே தண்ணீர் குடிக்க வேண்டும் போலே இருந்தது. என்ன செய்யலாம் என்று யோசித்தார்.

அவர் நின்று கொண்டிருந்த இடம் மகேந்திர மலை சுற்றிலும் பார்த்தார். தண்ணீர் இருக்கின்ற இடம் எதுவுமே தெரியவில்லை. கொஞ்சத் துாரத்திலே ஒரு முனிவர் உட்கார்ந்திருப்பது தெரிந்தது. மிகவும் அமைதியாக அவர் உட்காந்திருந்தார். ஆஞ்சநேயர் அவரிடம் போனர். முனிவரே நான் இராமபிரானுக்காக சீதையைத் தேடிக்கண்டு பிடித்து விட்டு திரும்பி வந்து கொண்டிருக்கிறேன். மிகவும் தாகமாக இருக்கிறது. தண்ணீர் இருந்தால் தாருங்கள். இல்லையென்றால் அது இருகின்ற இடத்தைக் காட்டுங்கள் நான் போய் குடித்துக் கொள்கிறேன் என்றார்.

முனிவர் தண்ணீர் இருக்கிற திசையை சுட்டிக் காட்டினார். ஆஞ்சநேயர் அங்கே புறப்பட்டார். போவதற்கு முன்னர் சீதை அவரிடம் கொடுத்த சூடாமணி, இராமனின் முத்திரை மோதிரம் பிரம்ம தேவன் கொடுத்த ஒரு கடிதம் இது மூன்றையும் முனிவர் முன்னாலே வைத்து விட்டு தண்ணீர் குடிப்பதற்காகப் போனார்.

கொஞ்ச நேரத்திலே இன்னொரு குரங்கு அந்தப் பக்கமாக வந்தது. முனிவர் முன்னாடி இருந்த சூடாமணி மோதிரம் கடிதம் எல்லாவற்றையும் எடுத்தது. முனிவருக்குப் பக்கத்திலே இருந்த கமண்டலத்துக்குள்ளே போட்டுவிட்டு போய்விட்டது. முனிவர் அதையும் புன்னகையோடு பார்த்துக் கொண்டிருந்தார்.

ஆஞ்சநேயர் தண்ணீர் குடித்து விட்டு திரும்பி வந்தார். முனிவருக்கு முன்னாலே வைத்து விட்டு போனது எதுவும் அங்கே இல்லை.பயந்து விட்டார். முனிவரைக் கேட்டார் அவர் கமண்டலத்துக்கு பக்கத்திலே கண்ணைக் காட்டினார்.

இவர் உடனே ஓடிப்போய் அதற்குள் எட்டிப்பார்த்தார். உள்ளே பார்த்தால் இவருக்கு ஒரே ஆச்சரியம். இவர் வைத்து விட்டு போனது மாதிரி ஆயிரக்கணக்கான முத்திரை மோதிரங்கள் கமண்டலத்துக்குள்ளே இருந்தன.அனுமார் குழம்பி போய்விட்டார். முனிவரைப் பார்த்தார். சுவாமி இவ்வளவு கிடக்கின்றதே இதிலே நான் விட்டுவிட்டுப் போன மோதிரம் எது? என்று கேட்டார்.

முனிவர் மிகவும் நிதானமாக அலட்டிக் கொள்ளாமல் இதற்கு பதில் சொன்னார். குழந்தாய்! இராமவதாரம் நடக்கிற காலங்களிலெல்லாம் சீதையை இராவணன் கவர்ந்து செல்வதும் அதன் பின்பு அனுமார் சீதையை கண்டு விட்டு திரும்பு போது முத்திரை மோதிரத்தை என் கமண்டலத்துக்குள் போடுவது வழக்கம். அப்படி போட்ட மோதிரங்களை தான் இப்போது நீ இந்த கமண்டலத்துக்குள்ளே பார்க்கின்றாய் என்றார். இதைக் கேட்டவுடனே ஆஞ்சநேயருக்கு இருந்த கர்வம் ஓடிப் போய்விட்டது. வெட்கத்தோடு முனிவரைப் பார்த்தார்.

சுவாமி! அப்படி என்றால் இதுவரைக்கும் எத்தனை இராமர்கள் தோன்றியிருக்கின்றார்கள் என்று கேட்டார். கமண்டலத்திலே உள்ள மோதிரம் எத்தனை என்று கணக்குப் போடுவது முடியாத காரியம் என்று சொல்லி விட்டார் முனிவர்.

ஆஞ்சநேயர் யோசித்தார். என்னை மாதிரி எத்தனையோ பேர் இந்தக் காரியாத்தை செய்திருக்கிறார்கள் அவர்களை விட பெரிதாக அப்படி நான் என்னத்தை செய்துவிட்டேன் என்று நினைத்தார். அதன் பின்பு அங்கதன் இருக்கின்ற இடத்துக்குப் போனார். அவரோடு சேர்ந்து கொண்டு இராமபிரான் இருக்கின்ற இடத்துக்குப் போனார். வணங்கினார். கண் கலங்கினார். ஆச்சிரமத்திலே நடந்ததையெல்லாம் சொன்னார். எல்லாவற்றையும் கேட்டதற்குப் பின்பு இராமபிரான் சிரித்துக் கொண்டே முனிவர் வேடத்திலே வந்தது நான் தான். உன் நன்மைக்காக இந்த வேடிக்கையைச் செய்தேன். கவலைப்படாதே இதோ பார்! என்றார்.

முனிவர் ஆச்சிரமத்திலே விட்டுவிட்டு வந்த மோதிரம் ராமர் கையிலே ஒளி வீசிக் கொண்டிருந்தது. ஆஞ்சநேயர் அப்படியே தரையில் விழுந்து வணங்கினார். அதற்குப் பின் எந்த நிலையிலும் அவர் உள்ளத்திலே கர்வம் வரவே இல்லையாம். இந்தக் கதை எதற்கு என்றால் எந்த சமயத்திலும் மனதிலே கர்வத்துக்கு இடம் கொடுக்கக் கூடாது என்பதனை வலியுறுத்துவதற்காகத் தான். அனுமார் எவ்வளவு கஷ்டப்பட்டு சீதை இருக்கின்ற இடத்தைக் கண்டுபிடித்தார். நான் அதை விட அதிகமாக கஷ்டப்பட்டு என்னுடைய மோதிரம் இருக்கின்ற இடத்தைக் கண்டு பிடித்தேன் என்றார்.

எப்படி சார் என்றேன். அடகுக்கடையில் அதைக் கண்டுபிடித்தேன் சார் என் மனைவி தான் சார் அங்கே வைத்திருப்பார். நான் இன்டைக்குத் தான் அதை மீட்டுக் கொண்டு வருகிறேன். இனிமேல் ஒரு மாதத்திற்கு எனக்கு கர்வம் வராது என்றேன். அது எப்படி என்றேன். இந்த [illegible] அங்கே கொடுத்து விட்டுத் தானே மீட்டிருக்கின்றேன் கையிலே [illegible] வரும் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிப்பு



(கொழும்பு)

இலங்கைக்கு வருகைத் தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரிப்பை பதிவு செய்து வருவதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன்படி இந்த மாதத்தின் இதுவரையான காலப்பகுதியில் 84,383 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகைத் தந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்தியாவிலிருந்து 22,629 பேரும், பிரித்தானியாவிலிருந்து 6,730 பேரும், சீனாவிலிருந்து 6,227 பேரும் இலங்கைக்கு வருகைத்தந்துள்ளனர்.

இந்த வருட ஆரம்பம் முதல் இதுவரையான காலப்பகுதியில் மாத்திரம் 981,162 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகைதந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. (நி)

# வடக்கு-கிழக்கு மக்கள் மாற்றத்தை எதிர்பார்க்கின்றனர்

## அநுரகுமார தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

**வடக்கு, கிழக்கில் உள்ள சகலரும் மாற்றத்தை எதிர்பார்ப்பதாகவும் அதற்கு தமிழ் மக்களின் ஆதரவை கோருவதாக தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

மட்டக்களப்பில் இடம்பெற்ற ஆசிரியர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், தமிழ் பேசும் மக்களின் அதே மொழியில் அரசுடன் பழகும் வாய்ப்பை ஏற்படுத்தி தருவதாகவும் அவர்களின் மதம் மற்றும் கலாச்சாரத்தை பாதுகாத்து அவர்களின் வளர்ச்சிக்கு தேவையான அனைத்து விடயங்களும் செய்து தரப்படும் என்றும் அனுர உறுதியளித்துள்ளார்.

இதேவேளை, தமது அரசாங்கத்தின் கீழ் ஆசிரியத் தொழில் நாட்டிலுள்ள பத்து முக்கிய தொழில்களில் ஒன்றாக மாறும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், தேசிய மக்கள் சக்தியுடன் மோதக்கூடிய அரசியல் கட்சி தென்னிலங்கையில் தற்போது இல்லை என்றும் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். (நி)



# எரியூட்டி அழிக்கப்படும் போதைப்பொருட்கள்

(புத்தளம்)

பாதுகாப்பு தரப்பினரால் மீட்கப்பட்ட 600 கிலோ கிராமிற்கும் அதிக நிறையுடைய போதைப்பொருட்கள் எரியூட்டப்பட்டு அழிக்கப்பட்டு வருகின்றன.

புத்தளம் வனாத்தவில்லு பகுதியில் குறித்த போதைப் பொருட்கள் எரியூட்டப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

புத்தளம் நீதவான், போதைப்பொருள் கட்டுப் பாட்டுப் பிரிவின் பிரதிநிதிகள், அரச இரசாயன பகுப்பாய்வாளர் மற்றும் போதைப்பொருள் தடுப்புப் பணியகத்தின் அதிகாரிகளின் மேற்பார்வையில் இந்தப் பணிகள் இடம்பெற்று வருவதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (நி)

# பாலித ரங்கே பண்டாரவின் மகன் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டாரவின் மகன் கருவலகஸ்வெவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் செலுத்திய மகிழுந்து நேற்று அதிகாலை விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

குறித்த மகிழுந்து வீதியை விட்டு விலகி முச்சக்கர வண்டி ஒன்றுடன் மோதியே இந்த விபத்துநேர்ந்துள்ளது.

இதன்போது காயமடைந்த முச்சக்கரவண்டியின் சாரதி புத்தளம் ஆதார மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டிலேயே ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டாரவின் மகன் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (நி)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 350 | 320 | 250-300 | 250 |
| உருளைக்கிழங்கு | 180 | 230 | 200 | 185 | 200 |
| பச்சைமிளகாய் | 160 | 120 | 150 | 120-150 | 200 |
| தக்காளி | 700 | 700 | 700 | 600 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 150 | 150 | 100-120 | 200 |
| கோவா | 300 | 300 | 250 | 200 | 320 |
| கரட் | 350 | 550 | 650 | 400 | 600 |
| பூசணி | 140 | 200 | 150 | 130 | 200 |
| புடோல் | 160 | 300 | 200 | 180 | 300 |
| வாழைக்காய் | 180 | 200 | 140 | 120-150 | 200 |
| சின்ன வெங்காயம் | 350 | 450 | 400 | 300-500 | 350 |
| பெரிய வெங்காயம் | 250 | 250 | 250 | 250 | 250 |
| பாகற்காய் | 1200 | 700 | 1200 | 800 | 1000 |
| வெண்டக்காய் | 200 | 250 | 180 | 300 | 320 |
| கருணைக் கிழங்கு | 200 | 200 | 180 | 150 | 200 |
| பயற்றங்காய் | 250 | 300 | 150 | 200-250 | 300 |
| லீக்ஸ் | 600 | 700 | 700 | 400 | 600 |
| பீற்றூட் | 600 | 600 | 600 | 500 | 700 |
| கறிமிளகாய் | 800 | 700 | 700 | 500 | 700 |
| முருங்கைக்காய் | 1800 | 1500 | 1200 | 800-1200 | 1200 |
| போஞ்சி | 800 | 700 | 600 | 380 | 800 |
| கத்தரிதம்புள்ள | 250 | 250 | 300 | — | 200 |
| கீரை – 1 பிடி | 60 | 80 | 120 | 40-60 | 80 |
| தேசிக்காய் | 1000 | 1000 | 1200 | 700-900 | 1200 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 110 | 80 | 60-120 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 600 | 400 | 300 | 450 |
| வெங்காயப்பூ | 300 | 400 | 400 | — | 400 |
| முள்ளங்கி | 160 | 200 | 200 | 300 | 320 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 50 | 200 | 80 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | 180 | 120 | 100 | 250 |

# தினசரி விற்றமின் மாத்திரைகள் ஆபத்தை விளைவிக்கும்

## ஆய்வில் தகவல்

(கொழும்பு)

தினசரி விற்றமின் மாத்திரைகளை உட்கொள்வது மக்கள் நீண்ட காலம் வாழ உதவாது எனவும், ஆரம்பகால மரணத்தின் அபாயத்தை அதிகரிக்கக்கூடும் என்றும் ஒரு புதிய ஆய்வு கண்டறிந்துள்ளது.

பரிபூரண ஆரோக்கியம், நோய் எதிர்ப்பாற்றல், கூடுதல் ஆயுள் ஆகியவற்றுக்காக மல்டி விற்றமின் மாத்திரைகளை எடுத்துக்கொள்ளும் போக்கு தற்போது அதிகரித்துள்ளது. ஆரோக்கிய குறைவுக்காக மருத்துவர்கள் பரிந்துரைப்பதற்கு அப்பாலும், மருத்துவர் ஆலோசனை உடனோ அல்லது இன்றியோ சுயவிருப்பத்தின் பேரிலும் தினசரி விற்றமின் மாத்திரை எடுத்துக்கொள்ள பலரும் விரும்புகின்றனர்.

ஆனால் அவற்றால் உருப்படியான பலன் இல்லை என்பதோடு, மரண அபாயத்துக்கும் வித்திடக்கூடும் என்கிறது புதிய ஆய்வு முடிவு.

'ஜாமா நெட் ஒர்க் ஓபன்' என்பதில் வெளியான இந்த ஆய்வில், 20 ஆண்டுகளுக்கும் மேலாக 4,00,000 ஆரோக்கியமான பெரியவர்கள் உட்படுத்தப்பட்டனர். இந்த ஆய்வின் முடிவில் நீண்ட ஆயுளை மேம்படுத்த மல்டி விற்றமின் பயன்பாடு உதவவில்லை என்று கண்டறியப்பட்டது. ஆச்சரிய அதிர்ச்சியாக, நீண்ட காலம் வாழ்வதற்குப் பதிலாக, மல்டி விற்றமின்களை எடுத்துக் கொண்டவர்கள் 4 சதவீதம் அதிகமாக உயிரிழக்கிறார்கள் என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மல்டி விற்றமின்களின் விலை அதிகமில்லை என்பதால், அவற்றை நேரடியாக எடுத்துக்கொள்ளும் போக்கு அதிகரித்துள்ளது. இதற்கு பதிலாக இனி உணவில் இருந்து கிடைக்கும் விற்றமின்களை உடல் கிரகிக்க வழி செய்வதே சிறப்பு எனவும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

நமது உணவில் அதிக காய்கறிகள் மற்றும் முழு தானியங்கள் அல்லது பருப்பு வகைகளைச் சேர்ப்பது, சிவப்பு இறைச்சி உட்கொள்ளலைக் குறைப்பது, பணியின் பெயரில் சதா உட்கார்ந்திருக்கும் நேரத்தைக் குறைப்பது, மது அருந்துவதைக் குறைப்பது ஆகியவற்றின் மூலம் நமது நோக்கம் பலிதமாகும் என்றும் ஆராய்ச்சியின் முடிவில் தெரிவித்துள்ளனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்மிடமுள்ள குறைகளை நீக்கிக்கொள்வதே நமக்கு ஏற்படக்கூடிய பெரிய அதிர்ஷ்டமாகும்.
– கதே

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## காலச்சூழலுக்கேற்றதாக நிகழ்வுகளை மாற்றுங்கள்

***பக்கத்திலிருப்பவர் துன்பந்தனைப் பார்க்கப் பொறாதவன் புண்ணியமூர்த்தி.***

என்பான் பாரதி.

அயல் வீட்டார் பசி இருக்கும்போது நாம் உண்டு உறங்குவது பாவத்தின் உச்சம். ஆகையால் அயலவனின் அவலத்தையும் போக்கி, நாமும் வாழ்வதுதான் மனித வாழ்க்கை.

ஆம், நம் தமிழ்ப் பண்பாட்டின் அத்தனை விழுமியங்களும் பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் அறத்தின் பாற்பட்டவை.

உண்மை. தமிழர் வாழ்வியலில் இருக்கக் கூடிய சுபகாரியங்கள், அபரபக்க நிகழ்வுகள் அனைத்தையும் நாம் சீர்தூக்கிப் பார்ப்போமாயின், அங்கு இடம்பெறுகின்ற எல்லா நிகழ்வுகளும் சடங்குகளும் அறத்தை – தர்மத்தை – பிற உயிர்களை வாழவைக்கின்ற ஜீவகாருண்யத்தை அடித்தளமாகக் கொண்டவை என்பது தெரியவரும்.

குறிப்பாக, தமிழர் பண்பாட்டில் நடக்கின்ற திருமணம் என்பது இல்லறத்தின் தொடக்கம். இல்லறம் என்பது விருந்தோம்பல் எனும் அறத்தின் இருப்பிடம்.

எனவே திருமண பந்தத்தின்போது ஏழைகளையும் சந்நியாசிகளையும் அழைத்து அவர்களுக்கு உணவளித்து புதுவாழ்வு தொடங்கப்படும்.

எனினும் இந்த நிலைமை கால ஓட்டத்தில் மாற்றமுற்று வசதி படைத்தவர்களை அழைத்து அவர்களுக்கு அறுசுவை விருந்து அளிப்பதாக நிலைமை மாறிவிட்டது.

அதிலும் சில திருமண நிகழ்வுகள் நட்சத்திர விடுதிகளில் நடப்பது வேறு விடயம்.

இதேபோன்றுதான் ஒருவர் இறந்து விட்டால் அவர் பொருட்டுச் செய்கின்ற அத்தனை சடங்குகளும் கிரியைகளும் ஏழைகளுக்கு உதவுவதாகவும் இல்லாதவர்களுக்கு ஈந்தளிப்பதாகவும் சந்நியாசிகளின் தேவையை நிறைவு செய்வதாகவும் அமைந்தன. இங்குதான் இறந்தவர் பொருட்டு அவரவர் தகுதி நிலைக்கேற்ப கோதானம், பூதானம், அன்னதானம் செய்கின்ற நடைமுறை நம் தமிழ்ப் பண்பாட்டில் இருந்தது.

எனினும் இப்போது அந்த நடைமுறைகள் முற்று முழுதுற அற்றுப் போய், வசதி படைத்தவர்களுக்கு உணவு கொடுக்கின்ற நடைமுறை வந்துற்றது.

பரவாயில்லை. கால சூழ்நிலைக்கேற்ப நிகழ்வுகளை, சடங்குகளை மாற்றி அமைப்போம்.

திருமண நிகழ்வை மிகவும் எளிமையாக நிறைவு செய்து மீதப்படுத்தப்பட்ட ஆடம்பரச் செலவை ஏழை மாணவர்களின் கல்விக்கு வழங்குவோம்.

இறந்தவர்கள் பொருட்டு செய்யப்படுகின்ற நிகழ்வுகளை பூசை வழிபாடுகளுடன் நிறைவு செய்து, செலவிடவிருந்த மிகுதித் தொகையை நோயாளர்களுக்கு உதவும் வகையில் வைத்தியசாலைகளுக்கு அன்பளிப்பாக வழங்குவோம்.

இவ்விதம் நாம் அறப்பணி செய்வோமாயின் அதனால் எத்தனையோ ஏழை மாணவர்கள் நன்மையடைவர். நோயாளர்கள் பயனடைவர்.

ஆம், நோயுற்ற வேளை உண்பதற்கு ஆன ஆகாரம் இல்லையென்று ஏங்குகின்ற ஏழைகளுக்கு உதவுவது சரியா? அழைப்பிதழ் கொடுத்து மண்டபம் எடுத்து சர்க்கரை வியாதி உள்ளவருக்கு சோறு கறியுடன் வடை, பாயாசம், சர்க்கரைச்சாதம் கொடுப்பது முறையா? என்று ஒரு கணம் சிந்திப்போம்.

நிகழ்வுகளை மாற்றியமைப்போம். மானிடம் காப்போம். மன்றெடுத்த சேவடியான் மனம் குளிர வைப்போம்.

## ஞானச்சுடர் வெளியீடு

(கரணவாய்)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவையின் மாதாந்த வெளியீடான ஞானச்சுடர் 318 வெளியீடு நேற்று காலை 10.45 மணியளவில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி அமுதசுரபி மோகனதாஸ் சுவாமிகள் முன்னிலையில் சந்நியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டு பேரவை உறுப்பினர் ஓய்வு பெற்ற அதிபர் சிவநாதன் தலைமையில் இடம் பெற்றது. (நி-60)

## மசகு எண்ணெயின் விலையில் மாற்றம்

(வோஷிங்டன்)

சர்வதேசச் சந்தையில் மசகு எண்ணெயின் விலை நேற்றைய தினம் சற்று வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

உலக சந்தையில் WTI ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 81.54 அமெரிக்க டொலராக வீழ்ச்சியை பதிவு செய்துள்ளது.

அத்துடன் பிரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 86.41 அமெரிக்க டொலராக நிலவுகிறது.

இதேவேளை உலக சந்தையில் இயற்கை எரிவாயுவின் விலை 2.60 அமெரிக்க டொலராக வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது. (நி)

# இணைவதா, பிரிவதா?

## ரணில்,மொட்டு இறுதிக்கட்ட பேச்சு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவைப் பெறுவதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் சிறிலங்கா பொதுஜன பெரமுனவிற்கும் இடையிலான முக்கிய சந்திப் பொன்று எதிர்வரும் வாரத்தில் நடைபெறவுள்ளது.

தற்போது பொது ஜன பெரமுனவின் ஒரு குழு ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவாக செயற்பட்டு வரும் அதேவேளை, நாமல் ராஜபக்ஷவின் தலைமையில் மற்றுமொரு குழு எதிராக செயற்பட்டு வருகின்றது.

இந்த சந்திப்பில் இருதரப்பினருக்கும் இடையில் பொதுவான ஒப்பந்தம் குறித்து கலந்துரையாடப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# மீண்டும் கடன் வலையில் இலங்கை விழும் அபாயம்

## புள்ளிவிபரவியல் திணைக்கள பேராசிரியர் எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கை மீண்டும் கடன்வலையில் வீழ்ந்து விடும் அபாயம் காணப்படுவதாக பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதார மற்றும் புள்ளி விபரவியல் திணைக்களத்தின் பேராசிரியர் வசந்த அத்துகோரள தெரிவித்துள்ளதாக தென்னிலங்கை ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த செய்தியில், இம் மாதம் முதல் இருபத்திஇரண்டு நாட்களில் மாத்திரம் இலங்கை அரசாங்கம் உள்ளூர் திறைசேரி உண்டியல்கள் மற்றும் பங்குச் சந்தைகளில் இருந்து ஒரு இலட்சத்து பதினோராயிரத்து எழுநூற்று பதினான்கு கோடி ரூபாய் கடனாகப் பெற்றுள்ளதாகவும், இது அதிகம் எனவும் பேராசிரியர் தெரிவித்தார்.

இவ்வாறாக, இம் மாதம் முதல் இருபத்திஇரண்டு நாட்களில், எண்பத்தாறாயிரத்து நூற்று நாற்பது கோடி கருவூல உண்டியல்களும், முப்பத்தொன்பதாயிரத்து எழுபத்தைந்து கோடி கருவூலப் பத்திரங்களும் கடனாகப் பெறப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு, அரசாங்கம் உள்ளூர் சந்தையில் பெப்ரவரியில் எண்ணாயிரத்து எண்ணூற்று அறுபத்தைந்து கோடி ரூபாயும், மார்ச் மாதத்தில் அறுபத்து நான்காயிரத்து நூற்று நாற்பத்திஒன்பது கோடி ரூபாயும், மார்ச் மாதத்தில் எண்பத்திநான்காயிரத்து முந்நூற்று இருபது கோடி ரூபாயும், ஏப்ரல் மாதத்தில் எழுபத்தி ஒன்பதாயிரத்து எழுநூற்று இருபத்தைந்து கோடி ரூபாய் என இந்த ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில், உள்ளூர் சந்தையில் பெறப்பட்ட மொத்த கடன் தொகை முந்நூற்று எண்பத்து எட்டாயிரத்து அறுபத்திஇரண்டு கோடி ரூபாய் ஆகும்.இந்த நிலையில் நாட்டின் கடன் சுமை அதிகரித்து கடன் நெருக்கடிக்கு வழிவகுக்கும் என பேராசிரியர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.(நி)

# இலங்கை - இந்தியா இடையில் புதிய உடன்படிக்கை ஏதுமில்லை

## எல்லை, கச்சதீவு பிரச்சினை தொடர்பில் வெளிவிவகார அமைச்சர்

(கொழும்பு)

பாக்கு நீரிணை கடற்பரப்பில் இரு நாடுகளுக்கும் இடையிலான எல்லை மற்றும் கச்சதீவு பிரச்சினை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இலங்கை மற்றும் இந்தியாவிற்கு இடையில் எவ்வித புதிய உடன்படிக்கையும் ஏற்படுத்திக் கொள்ளப்படவில்லையென இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்தது. அது தொடர்பிலான எவ்வித பேச்சுவார்தைகளும் இடம்பெறவில்லையென வெளிவிவகார அமைச்சர், ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்தார்.

பாக்கு நீரிணை கடற்பரப்பில் இரு நாடுகளுக்கும் இடையிலான எல்லை தொடர்பான விவகாரங்கள் மற்றும் கச்சதீவு பிரச்சினை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக இலங்கை மற்றும் இந்தியாவிற்கு இடையில் விரிவான உடன்படிக்கை எட்டப்பட்டுள்ளதாக இந்திய ஊடகம் நேற்று முன்தினம் செய்தி வெளியிட்டிருந்தது.

எவ்வாறாயினும், ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட இணக்கப்பாடுகள் தொடர்பான விபரங்கள் வெளியிடப்படவில்லை என இந்திய அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

எனினும், அவ்வாறான பேச்சுவார்த்தைகள் இடம்பெறவில்லையென இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்தார்.(நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொழிற்பயிற்சி கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையானது 2024 ஆம் ஆண்டு இரண்டாம் அரையாண்டிற்கான முழுநேர கற்கைநெறிகள் 01.07.2024 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன. இக்கற்கைநெறிகள் கைதடி, காரைநகர், வல்வெட்டித்துறை, பண்டத்தரிப்பு, சுன்னாகம் தொழிற்பயிற்சி நிலையங்களில் நடைபெறவுள்ளன.

தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியலாளர், மின்னிணைப்பாளர், கணிய அளவையியலாளர், விருந்தினர் வரவேற்பாளர், வெதுப்பாளர், சமையாலாளர், நீர்க்குழாய் பொருத்துநர், முச்சக்கரவண்டி திருத்துநர், கணனி வன்பொருள் திருத்துநர், கணனி வடிவமைப்பாளர், அறை பராமரிப்பாளர், உணவு மற்றும் குளிர்பாணம் பரிமாறுபவர், குழந்தை பாராமரிப்பாளர், கட்டட நிர்மான உதவியாளர், பெண்கள் சிறுவர் களிற்கான ஆடை வடிவமைப்பாளர், சிகையலங்கரிப்பாளர், அழகுக்கலை வல்லுநர் போன்ற கற்கை நெறிகளிற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக் கற்கை நெறிகள் அனைத்தும் தேசிய தொழில் தகைமை மட்டம் -4 (NVQ - 4) சான்றுதழுக்கான பயிற்சி நெறிகளாகும்.

கற்க விரும்புவோர் தங்கள் பதிவுகளை மாவட்ட அலுவலகம் 4 ஆம் மாடி வீரசிங்கம் மண்டபம், இல 12 கே. கே. எஸ் வீதி யாழ்ப்பாணம் அல்லது அனைத்து தொழிற்பயிற்சி நிலையங்களிலும் மேற்கொள்ள முடியும்.

மேலதிக விபரங்களினை பெற்றுக் கொள்வதற்கு 021 222 7949, 071 031 8737, 077 613 9307 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும் என அதன் பிரதிப்பணிப்பாளர் கு. நிரஞ்சன் தெரிவித்துள்ளார். (நி)

## அடையாளத்தை உறுதிப்படுத்தி பெற்றுக்கொள்ளவும்

(முல்லைத்தீவு)

54318 வழக்கு இலக்கத்தினை உடைய கை உழவு இயந்திரத்தின் (வாகன இலக்கம் NW-NC 7695) உரிமையாளர் இருந்தால் தகுந்த அடையாளத்தை உறுதிப்படுத்தி சான்றுப் பொருளை பெற்றுக் கொள்ளுமாறு முல்லைத் தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

அவ்வாறு உரிமை கோரப்படாத விடத்து 2 மாதங்களின் பின் எதுவித மான முன் அறிவித்தல்கள் வழங்கப்படாது சான்றுப் பொருள் பகிரங்க ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யப்படும் என்பதையும் பதிவாளர் அறிவித்துள்ளார். (நி)

## கோண்டாவில் பகுதியில் ஆயுதங்களுடன் மூன்று பேர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோண்டாவில் பகுதியில் ஆயுதங்களுடன் மூன்று பேர் கோப்பாய் பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

வாள்கள் மற்றும் கைக் கோடாரிகள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

பருத்தித்துறையைச் சேர்ந்த 24 வயதான மூவர் கோண்டாவில் பகு தியில் உள்ள வீடொன் றுக்கு அருகில் கூடியிருந்த போது இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த கோப்பாய் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (நி-33)


## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 27 1/2
உயரம்: 6'
தகைமை/தொழில்: MDS, Dentist
எதிர்பார்ப்பு: Degree Holder
தொ.இ: B/12760

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 57
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: B.F.A, Teacher
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: B/12852

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: அத்தம்
2 இல் செவ்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: civil Engineer
எதிர்பார்ப்பு: பட்டதாரி, காரைநகர்
தொ.இ: B/13369

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 61
7 இல் செவ்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: Bsc.Teacher
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம், வெளிநாடு
தொ.இ: G/12935

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 17
1 இல் செவ்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: சாதாரண தரம்
எதிர்பார்ப்பு: வெளிநாடு, உள்நாடு
தொ.இ: G/12110

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: கேட்டை
உயரம்: 4'8"
தகைமை/தொழில்: BFA (Dance)
எதிர்பார்ப்பு: படித்த அரச தொழில்
தொ.இ: G/13755

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000
ரூபாய் மட்டும்


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like

### சிந்துஜன்




### அனிஸ்ரா




### தன்விகா




### டயின்




### பிரதீபன்




### சங்கவி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்ப் பொது...

ரும், தமிழ் மக்கள் பொதுச் சபை உறுப்பினருமான நிலாந்தன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவது தொடர்பில் நேற்று வவுனியாவில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் இடம்பெற்ற தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கும் தமிழ் மக்கள் பொதுச்சபை உறுப்பினர்களுக்குமான கலந்துரையாடலின் பின் இடம்பெற்ற ஊடகச்சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக தமிழ்த் தேசியக் கட்சிகளும், மக்கள் அமைப்பாகிய தமிழ் மக்கள் பொதுச் சபையும் இணைந்து கலந்துரையாடி ஒரு உடன்பாட்டுக்கு வந்துள்ளோம். அந்த உடன்பாட்டின் அடிப்படையில் கட்சிகளும், மக்கள் பொதுச் சபையும் இணைந்து ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்கியுள்ளது. அந்த பொதுக் கட்டமைப்பு தமிழ்த் தேசிய பேரவை என அழைக்கப்படும். தமிழ்த் தேசியப் பேரவையின் கூட்டம் எதிர்வரும் ஜூலை 6ஆம்திகதி இடம்பெறும். இக் கூட்டத்தில் உத்தியோகபூர்வமாக புரிந்துணர்வு உடன்படிக்கை கட்சிகளுக்கும், மக்கள் அமைப்புக்கும் இடையில் கைச்சாத்திடப்படும். அதன் பின் தேவையான உப குழுக்களை உருவாக்கி ஜனாதிபதித் தேர்தலில் ஒரு பொது தமிழ் வேட்பாளரை நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் செயல்பூர்வமாக முன்னெடுக்கப்படும் என்றார்.

இவ் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் தலைவருமான சுரேஸ் பிறேமச்சந்திரன் கருத்து தெரிவிக்கையில்,

தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விடயத்தில் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளும், சிவில் அமைப்புக்களும் ஒன்று கூடி தங்களை ஒரு அமைப்பாக பிரகடனப்படுத்தியுள்ளார்கள். தற்போது இரு தரப்பும் ஒன்றிணைந்து ஒரே அமைப்பாக தமிழ் தேசிய பேரவையாக செயற்பட இணங்கியுள்ளன. வருகின்ற ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு - கிழக்கு சார்ந்து தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதாக தீர்மானித்துள்ளோம். அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்வதற்கான திகதி தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன் பின் தேவையான குழுக்கள் நிறுவப்படும். அந்தக் கட்டமைப்புக்கள் உருவாக்கப்பட்டு பொது வேட்பாளர் விடயம் கையாளப்படும் என்றார்.

இதில், தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ), தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்), தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, தமிழ்த் தேசியக் கட்சி, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈபிஆர்எல்எப்), தமிழ்த் தேசிய பசுமை இயக்கம், ஜனநாயக போராளிகள் கட்சி என்பன அங்கத்துவம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7,10,250)

## ஜனாதிபதித்...

உயர்மட்ட அதிகாரிகளுக்கு தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அதேநேரம் இலங்கை மின்சார சபை, நீர் வழங்கல் மற்றும் இலங்கை போக்குவரத்து சபை ஆகியவற்றுக்கும் தேர்தல்கள் ஆணைக்குழு மேற்படி விடயத்தை அறிவித்துள்ளது.

இந்நிலையில் ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதியை தேர்தல்கள் ஆணைக்குழு நிர்ணயித்தால் அதற்குத் தேவையான சகல ஏற்பாடுகளும் தயாராக உள்ளதாக அரசாங்க ஊடகப் பணிப்பாளர் கங்கானி கல்பனா லியனகே தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாடளாவிய ரீதியில் உள்ள வாக்களிப்பு நிலையங்களின் குறைபாடுகள் தொடர்பில் அறிக்கை ஒன்றை வழங்குமாறு அனைத்து கிராம உத்தியோகத்தர்களுக்கும் கடந்த வாரம் அறிவிக்கப்பட்டதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் செப்ரெம்பர் மாதம் 14 திகதி முதல் ஒக்ரோபர் மாதம் 16 ஆம் திகதிக்கு இடையில் நடத்தப்படும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (ந-7,10)

## மிகப் பயங்கர...

பொலிஸார், இராணுவம், கடற்படை, விமானப்படை செயற்பாடுகள் எவ்வாறு இருக்கிறது என்பதை அறிய முடியும் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

எனது வீட்டின் முன்பாக ஆயுதங்களுடன் நடமாடியமை தொடர்பாக நாளை சபாநாயகருக்கு எழுத்து மூலம் வழங்குவதுடன் உரிய தரப்புக்களுக்கும் தெரியப்படுத்தவுள்ளேன் என்றார்.

பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனின், இல்லத்தின் முன்பாக நேற்று முன்தினம் இனந்தெரியாத நபர்களின் நடமாட்டம் அவதானிக்கப்படமை தொடர்பாக கொடிகாமத்தில் நேற்று ஊடகங்களின் கேள்விக்கு பதிலளித்தபோதே சிவஞானம் சிறீதரன் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு அருகில் உள்ள எனது இல்லத்தின் முன்பாக 4 மோட்டார் சைக்கிள்களில் 9 பேர் இனந்தெரியாதவகையில் முகத்தையும் மோட்டார் சைக்கிள் இலக்கத் தகட்டையும் கறுப்புத் துணிகளால் மறைத்து வாள்களை சுழற்றியவாறு வீதியால் செல்வது எனது வீட்டு கண்காணிப்பு கமராவின் மூலம் அவதானிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் நடக்கும் பல குற்றச்செயல்களுக்குப் பின்னால் இராணுவம், கடற்படை, விமானப்படை, பொலிஸார், உளவுப்பிரிவு பின்னணியில் இருப்பது மிகத் துலாம்பரமாக வெளிப்படுத்துகிறது.

யுத்தகாலத்தில் இராணுவத்தினரும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும் ஃபீல்ட் பைக்கில் கறுப்புத் துணிகளைக் கட்டியவாறு வந்து துப்பாக்கி சூட்டில் ஈடுபட்டனர்.

அதே பாணியில் உள்ளூர் மோட்டார் சைக்கிளை பயன்படுத்தி ஏன் இராணுவம் கடற்படை, விமானப் படை, பொலிஸார், உளவுப் பிரிவு இதனைச் செய்திருக்கலாம் என்ற சந்தேகம் எமக்கு இருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் உள்ள இளைஞர் குழுக்கள் இதனைச் செய்வதாகக் காட்டிக் கொண்டு, அவர்களைக் கைது செய்யாமலும் நடவடிக்கை எடுக்காமலும் விட்டு யாழ்ப்பாணத்தை அச்ச சூழலுக்குள் வைத்திருக்கும் முயற்சி நடக்கிறது. இதற்குப் பின்னணியில் அரச புலனாய்வுப் பிரிவு இருப்பது மிகத் துலாம்பரமாகத் தெரிகிறது.

யாழ்ப்பாணம் தற்போது மிகப் பயங்கரமான சூழலில் இருக்கிறதென்பதை மிகத் தெளிவாக சொல்லி வைக்க விரும்புகிறேன்.

எனது வீட்டின் முன்பாக ஆயுதங்களுடன் நடமாடியமை தொடர்பாக நாளை சபாநாயகருக்கும் எழுத்து மூலம் வழங்கி உரிய தரப்புக்களுக்கும் விரைவில் தெரியப்படுத்துவேன் என்றார். (ந-7,10)

## மோ.சைக்கிள்...

மேலும் தெரியவருவதாவது,

மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் மடு ஜோதிநகர் இரண்டாம் கட்டை பாலத்தின் அருகில் விபத்துக்குள்ளாகினர்.

இதில் மன்னார் பெரியகமம் பிரதேசத்தில் வசித்து வரும் 35 வயதுடைய இளம் குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

காயமடைந்தவர் முருங்கன் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். காயமடைந்த நபர் பண்டிவிரிச்சான் பகுதியை சேர்ந்தவர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் மன்னார் பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ந-7,10,285)


மஹஜன சம்பத
திகதி 2024.06.29
சீட்டிழுப்பு இலக்கம் 5519
M 9 8 7 0 4 1
அத சம்பத
M 7 0 4 1
சீட்டிழுப்பு இலக்கம் 0094
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.06.29
சீட்டிழுப்பு இலக்கம் - 1549
D 07 26 35 75 D
40580

மெகா பவர்
திகதி 29/06/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1867
O 10 37 46 49 52
40137

லக்கி 7 VIP
திகதி 2024.06.29
சீட்டிழுப்பு இலக்கம் 0345
H 2 8 0 0 7 9 H

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3761
சீட்டிழுப்பு திகதி 29.06.2024
U 03 34 69 73
U 28365
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.06.29
சீட்டிழுப்பு இலக்கம் 0828
தனுசு 04 06 17 25 தனுசு
83400 23

உத்தியோகபூர்வ முடிவுகள்
29.06.2024 வெற்றி வாரம் 227 வர்ணம் நீலம்
C 6 2 7 4 9 8
52384
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,612,776.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2493 வர்ணம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 29.06.2024 தினம் சனிக்கிழமை
30 43 53 72 G
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 95,022,636.80
DLB

சனிதா
திகதி 2024.06.29 வெற்றி வாரம் 4654
07 19 30 39 E
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.63,554,345.60
99588
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4205 வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.06.29 தினம் சனிக்கிழமை
22 23 24 28 விருச்சிகம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 8,086,376.00
628167
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
L 05 37 45 58 72
1669 சிவப்பு 29.06.2024 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 530,333,848.60
DLB

சனிக்கிழமை
வெற்றி வாரம் : 2319
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 123,885,609.60
ADA KOTIPATHI
07 36 46 68 E
201067
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வங்கி மீதி வசதி (Show money)

சகல நாடுகளுக்குமான
விசாவினை உறுதிப்படுத்திக்
கொள்ள குறைந்த கட்டணத்தில்
வங்கி மீதி வசதிகள்

தொடர்புகளுக்கு:

**074 17 37 684**

(0111)

## பணிப்பெண் தேவை

புலோலியில் உள்ள
வீடொன்றில் குழந்தைகளைப்
பராமரித்து வீட்டு வேலை
செய்ய 40 - 55 வயதுள்ள
பெண் தேவை.

**077 459 7938**

(121)

## Care Giver - பராமரிப்பாளர்

**கனடா, அமெரிக்கா, ஜேர்மனி**
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை
பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma

கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள
நிரந்தரகுடியுரிமையுடனான 15'000
Care Giver வாய்ப்புக்களுக்கான
சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன்
Care Giver கற்கை நெறி மற்றும்
Immigration Services - வீசா சேவைகள்.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)

CIMS College
49A, Chapel Street, Jaffna.

(C-0705)

College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322

## அனைத்து நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்கள் குறைந்த விலையில்

- Air Ticket Date Change
- Travel Insurance
- Online Visa Appoinments
- Travel Itinerary
- Sri Lanka Visa Extension
- All Country Visa Services

உங்கள் அருகாமையில் எமது நேரடி கிளைகள்

கொழும்பு | மட்டக்களப்பு | திருகோணமலை | கிளிநொச்சி
புதுக்குடியிருப்பு | கொடிகாமம் | சாவகச்சேரி | புத்தூர்
யாழ்ப்பாணம் | நாச்சிமார் கோவிலடி | பண்டத்தரிப்பு
சுன்னாகம் | மானிப்பாய் | சங்கானை | கோப்பாய்
நெல்லியடி | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை

**V2 TRAVELS** 0768226240 0768226241

(C-0705)

## வேலைவாய்ப்பு

முகாமையாளர் பதவிக்குரிய வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளது.
முன் அனுபவம் தேவையில்லை.

தகைமைகள் :
- O/L, A/L படித்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.
- வயதெல்லை 18 - 45 வரை
- தங்குமிடம், உணவு வசதி ஒழுங்கு செய்து தரப்படும்.

(120)

**077 028 7429/ 076 774 3440**

## வேலையாட்கள் தேவை

எமது தளபாட நிலையத்திற்கு கீழ்வரும் வேலையாட்கள் தேவை.
- தச்சு வேலையாட்கள் (75,000/= மேல்)
- தளபாட பெயின்ரர் (60,000/= மேல்)
- வேலை பழக விரும்புபவர்கள் (25,000/= மேல்)

நிரந்தரமான வேலையும், தங்குமிட வசதியும் உண்டு.

**ஆர்க் தளபாட நிலையம்**
இல. 35, கொட்டைக்காடு லேன், கோண்டாவில்
கிழக்கு. (பஸ் டிப்போ அருகாமை)

(1355)

T.P : 021 221 9909, 077 300 1763

## காணி விற்பனைக்கு

மாவிட்டபுரம் சந்திக்கு
அருகாமையில் 9 பரப்புக்
காணி விற்பனைக்கு
உண்டு.

(C-0700)

**077 71 26 859**

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்
IELTS, A1UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN
ENGLISH 30% *Special offer for all the courses*
- GUARANTEED TO 7.5 in IELTS Exam.
- PASS in UK A1 Exam.
- Exam REGISTRATION CENTER.

(861)

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam / IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம்

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.

**T.P : 077 780 3970, 074 007 1970**

## ENGLISH CLASSES

**SPOKEN WITH GRAMMAR**

அனைத்து மாணவர்களுக்குமான School Book
Grade - 1 To A/L & others. Grammar & Spoken

- ENGLISH MEDIUM All Classes
- ENGLISH LITERATURE 9, 10, 11
- IELTS Classes

உங்கள் வீடுகளிற்கு வந்து கற்பித்து தரப்படும்.

(1356)

**076 232 1903**

## வீடு வாடகைக்கு

நெல்லியடி கொடிகாமம் வீதி 50 மீற்றர்
தூரத்தில் 5 அறைகளை கொண்ட வீடு
வாடகைக்கு உண்டு. காரியாலயம், I.T
சென்ரர் மற்றும் கொம்பனிகள், சிறு
கைத்தொழில்கள், களஞ்சியசாலை,
உங்களுக்கு ஏற்ற வகையில் வாகனத்
தரிப்பிடம், இணைந்த மலசலகூடம்
என்பனவற்றுடன் உண்டு. எந்த
நேரத்திலும் நேரில் பார்வையிடலாம்.

(C-0702)

**077 822 5333, 077 123 5115**

## கட்டுமான சேவை

உங்கள் கனவு இல்லங்களை நியாயமான கட்டணத்தில்
பொறியியலாளர்களின் மேற்பார்வையில் துரிதமாக அமைத்துக்
கொள்ளவும், உங்களின் முற்றுப்பெறாத கட்டிடங்களை
துரிதமாக பூர்த்தி செய்து கொள்ளவும் நாடுங்கள்.

**Luxmy Construction & Civil Engineering**
Puloly North, Point pedro.

**077 436 6704, 075 164 0104**

(C-0706)

## கடை வாடகைக்கு

நெல்லியடி பஸ் நிலையம்
அருகாமையில் கொடிகாமம்
வீதியில் 1 ஆம் மாடியில் கடை
வாடகைக்கு உண்டு.
விரும்பியவர்கள் தொடர்பு
கொள்ளவும்.

(C-0702)

**077 822 5333**

## Show Money

**1%**

லட்சத்திற்கு 1000 மட்டுமே
சகல நாடுகளுக்குமான
வங்கி இருப்பு/ விசா சேவை

(1263)

**T.P : 075 033 6759**

## நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரத் தம்பதிகள்

**(லயன்) பொன்னையா கதிரமலை - சிவக்கொழுந்து கதிரமலை**



### (லயன்) பொன்னையா கதிரமலை அவர்கள்

- First Level Management at "Lever Brothers (Ceylon) LTD" From 1958 To 1989 (31 Years)
- நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி கோவில் பரிபாலன சபையின் தலைவராக இறைபணியில் 1990.06.01 இலிருந்து 2024.05.31 வரை (முழுமையாக 34 ஆண்டுகள்)
- வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் ஸ்தாபகர்களுள் ஒருவராக அர்ப்பணிப்புமிக்க சேவையாளராக 1995 இலிருந்து 2024 வரை (29 ஆண்டுகள்)

கடந்த 2024.05.21, செவ்வாய்க்கிழமையன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி அமரர் **சிவக்கொழுந்து கதிரமலை** மற்றும் 2024.05.31 வெள்ளிக்கிழமையன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் **(லயன்) பொன்னையா கதிரமலை** ஆகியோரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (2024.06.30) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை வேளை கீரிமலை புனிதத் தீர்த்தக்கரையில் நடைபெற்றன.

தொடர்ந்து நாளை 2024.07.01, திங்கட்கிழமையன்று மு.ப. 11.00 மணியளவில் **"நெல்லை முருகன் திருமண மண்டபத்தில்"** நடைபெறவுள்ள

- ஆத்மசாந்திப் பிரார்த்தனை
- நினைவேந்தல் நிகழ்வு
- மதியபோசன நிகழ்வு

என்பவற்றில் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் நாம் துயருற்றிருந்தவேளை நேரிலும் தொலைபேசி மற்றும் சமூக ஊடகங்கள் வழியாக ஆறுதல்கூறி அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் பதாதைகள், மலர் வளையங்கள் மற்றும் மலர்மாலைகள் ஊடாக அஞ்சலி செலுத்தியோருக்கும் வைத்திய சேவைகளை வழங்கியோருக்கும் உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கும் சகல வழிகளிலும் உதவிகள் புரிந்தோருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குடும்பத்தினர்

புதுவளவு,
நெல்லியடி, கரவெட்டி

தொடர்புகளுக்கு: க.சூரியகுமாரன் (மகன்)
[illegible]

(C-701)

## வீடு வாடகைக்கு

வெள்ளவத்தையில் 42வது ஒழுங்கையில்
இல.3 இல் இரண்டு அறைகள்
(AC/ NON AC) இணைந்த
குளியலறையுடன் கூடிய அடுக்குமாடி
வீடு மாத வாடகைக்குண்டு.

(1314)

தொடர்புகளுக்கு:

**075 2786 033** (Whatsapp only)
**077 875 7860**

## V2 VISA SERVICES கனடா

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

**விமான பயணச்சீட்டுக்கள்**

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

**Sri lankan Visa Extention**
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-0705)

## தேவை

யாழ் நகரில் இயங்கும்
பிரபல தனியார் கல்வி
நிறுவனத்திற்கு பகல் பாதுகாப்பு
உத்தியோகத்தர் தேவை.

(C-699)

தொடர்புகளுக்கு :

**074 056 7791**

## பணிப் பெண் தேவை

வயோதிப பெண்
ஒருவரை பராமரிப்பதற்கு
பணிப்பெண்
ஒருவர் தேவை.

(1353)

தொடர்புகளுக்கு :

**0779 583 573**

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 265/= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 280/= | (Max)3Kg |
| 1 Kg Prima கோதுமை மா | - 169/= | |
| 1 Kg றவை | - 286/= | |
| 1 Kg அரிசி மா | - 205/= | |
| 1 Kg சம்பா | - 230/= | |
| 01 Ocean மீன் ரின் | - 395/= | ~~500/=~~ |
| 400g நெஸ்டமோல்ட் | - 729/= | ~~780/=~~ |
| 500ml விம் Liquid | - 310/= | ~~375/=~~ |
| 400g சஸ்ரயன் | - 3500/= | ~~3900/=~~ |
| 400g வட்டவல தேயிலை | - 999/= | ~~1140/=~~ |
| 70g பேபி சோப் | - 115/= | ~~145/=~~ |
| 01 கற்பூர பெட்டி | - 250/= | ~~340/=~~ |
| 180ml Chik சம்போ | - 360/= | ~~480/=~~ |
| 1 Fortune சோயா | - 100/= | ~~165/=~~ |
| 500g மலிபன் சொக்லட் கிறீம் பிஸ்கட் | - 470/= | ~~560/=~~ |
| 750g சுபோசா மா | - 560/= | ~~590/=~~ |

Max 01
400g Anchor

1015/=



~~1050/=~~

தரமான பொருட்களைசிறந்த
விலையில் கொள்வனவு
செய்திடுங்கள். மேலதிக
விலைக்கழிவு விபரங்களிற்கு
எமது Facebook:-
happy basket.lk
இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

(0124)

Happy Supermarket
**0777 8080 30**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.06.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.